கண்ணன்

1-8-58
13 ந.பை

675
OF THE REGISTRAR OF BOOKS
19 AUG 1958
MADRAS

கண்ணன் தபால்கள்

கண்ணனை மும்முறையாக்குங்கள். வார இதழாக்கவும் வேண்டாம். விலையையும் கூட்டவேண்டாம்.

—சுப. கோ. நாராயணசாமி, நாச்சியார்கோவில்.

நீங்களும் நானும் பகுதியை அதிகமாக வெளியிடுங்கள். கண்ணன் வெளியீடுகள் எல்லாம் கிடைக்கும்படிச் செய்யுங்கள். கண்ணன் எங்களுக்குக் குறித்த தேதியில் வந்தான். மகிழ்ச்சி.

—கே. ஏ. முகம்மது அலி, சிதம்பரம்.

ஒரு கிளைப் பறவைகள் எங்களுக்கு ஏற்றவாறு அருமையாக அமைந்திருக்கிறது.

—ச. பழனியப்பன், மே. சிவபுரி.

ஜனுவின் காளிகோட்டை உயர்ந்த இலக்கியம். மணி மணியான சொற்களில் அமைத்த அழகான தமிழோவியம். 'மியாவ், மியாவ்!' கவிதையில் இலக்கணம் மருந்துக்கும் இல்லை. 15-ஆம் தேதி கண்ணன் 21-ஆம் தேதி வந்தால் யாருக்குத்தான் பொறுமை இருக்கும்? கோலப் புத்தகம் நீளாமல் இருந்திருந்தால் சுவையாக இருந்திருக்கும். ஒரு கிளைப் பறவை அருமை. கேலிச் சித்திரம் பார்க்கக் கோரமாக இருக்கிறது.

—அமிழ்தன், பம்பாய்-28.

கே. சுந்தரேசனின் கதை வெகு ஜோர்.

—டி. பாலசுப்பிரமணி, பீமநகர்.

கண்ணனில் வண்ணச் சித்திரக் கதையைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.

—எம். ராஜேந்திரன், போத்தனூர்.

சங்கிலி மறைந்த மாயமும் காளிகோட்டையும் நன்றாக இருந்தன.

—ஏ. ஆர். கோவிந்தன், அத்தூர்.

'மியாவ், மியாவ்!' என்னுடைய சொந்தக் கவிதை. திருடி எழுதியனுப்பியிருக்கிறார் நண்பர்.

—எ. ந. கணபதி, பெரியாறு திட்டம்.

ஒரு கிளைப் பறவைகள் அற்புதமான கதை, நீங்களும் நானும் அதிகமாக வெளியிடுங்கள்.

—எஸ். சேதுராமலிங்கம், எட்டையபுரம்.

ஜனு யார் என்று இன்னும் புரியவில்லை. ஆணா, பெண்ணா?

—எஸ். சீனிவாசன், திருவல்லிக்கேணி.

ஒரு கிளைப் பறவை ஒப்பற்ற கதை. அடுத்த சித்திரத் தொடரை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

—கோ. சுவாமிநாதன், தென்கச்சிப் பெருமாள்நத்தம்.

ஜே. எம். சாலிக்குக் கண்ணன் மூலம் என் நன்றி. அவருடைய கதை 15-7-58-இல் வெளியான அட்டைப் படத்தை நினைப்பூட்டியது.

—இனியவன், விநாயகநல்லூர்.

கோயில் பூஜை மணி அடிப்பதும், மாதா கோயில் மணி ஒலிப்பதும் பள்ளிவாசல் பாங்கோசையும் - அரிசிலாற்றங்கரைக்கே ஒரு கிளைப் பறவைகள் நம்மை அழைத்துச் சென்றுவிடுகின்றன.

—எம். ஏ. அகமத் பஸுல்லா, மட்டஞ்சேரி. (சந்தா A-121.)

'பார்த்துப் போ' என்ற பாடல் பல கருத்துக்களுடன் வெளிவந்திருப்பது எங்கள் அதிருஷ்டமே.

—ச. ஆ. கேசவன், கழுகாசலபுரம்.

மாதம் மும்முறையாகவாவது, வாரம் ஒரு முறையாகவாவது கண்ணன் வெளிவரவேண்டும்.

—ர. க. பாஸ்கரன், கோவை.

'தெற்கு தேய்கிறது' என்ற உங்கள் பதில் மிகவும் பிரமாதம்! இந்தப் பகுதியை அதிகமாக வெளியிடுங்கள்.

—பி. கோபிநாத், ஆம்பூர்.

சென்ற இதழ் அங்கத்தினர் பகுதியில் வ - வரிசையில் தொடங்கும் பெயர்களுக்கு V என்பதற்குப் பதில் K என்று தப்பாக உள்ளது. இதை அங்கத்தினர்கள் திருத்திக்கொள்வார்களா?

—வசந்தா, திருச்சி.

ஆகஸ்டு பதினைந்து இதழில் வரப்போகும் முழுநீளக் கதையின் பெயர் என்ன?

—செல்வமணி, காஞ்சிபுரம்.

பூவண்ணன் அண்ணுவின் அறிமுகம் புதுமை.

—என்னெஸ், சேலம்-2.

மலர் 9 இதழ் 14

1—8—1958

குழந்தைகளே !

விடுமுறைக் காலப்போட்டி ஜூலை 31 - ஆம் தேதியோடு முடிவுற்று விட்டது. தமிழ் நாட்டுக் குழந்தைகள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் எழுதிக் குவித்திருக்கிறார்கள். விரைவில் போட்டியின் முடிவு அறிவிக்கப்படும்.

சில ஆசிரியர்களின் யோசனைக் கிணங்க, பள்ளிக்கூடங்களுக்கான பரிசுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்த விரும்புகிறோம். அந்தத் திட்டத்தைப் பற்றிப் பின்னர் அறிவிப்பேன்.

பலமுறை எச்சரித்திருந்தும் இன்னும் சிலர் பிறருடைய எழுத்துக்களைத் திருடி எடுத்து, அனுப்பி விடுகிறார்கள். சென்ற இதழில் வெளியான 'மியாவ் மாமா' கவிதை அன்பர் எ. ந. கணபதியின் சொந்தக் கவிதை என்று தெரிகிறது. அதைத் தன் பெயரில் எழுதியனுப்பிவிட்ட வெங்கடாஜலபதியைக் குறித்து வருந்துவதைத் தவிர வேறு என்ன செய்வது? தன் பெயர் பத்திரிகையில் வெளிவரவேண்டும் என்ற ஆசை ஒவ்வொருவருக்கும்தான் இருக்கும். ஆனால் தகாத முறையில் வந்து, பின்னால் உண்மை வெளியாகிவிட்டால் பன்மடங்கு வருத்தம்தான் உண்டாகும். அதுவும் பெரியவர்களான பிறகு, இதை நினைத்தாலே பெருத்த அவமானமாகவும் இருக்கும். ஆகவே சொற்பமாக இருந்தாலும். சொந்தமாக எழுதி உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டுகிறேன்.

—ஆசிரியர்.

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

எ. ந. கணபதி

பெரியாறு நீர் மின் விசைத் திட்டம் சென்னை ராஜ்யத்தின் முக்கியமான அணைத்திட்டம் என்பது நமக்குத் தெரியும். அதே போலத்தான் அந்த ஊர் அஞ்சல் நிலையத்திலே பணிபுரியும் எ. ந. கணபதியும் கவிதைகள் புனையும் இளங்கவிஞர்களிலே முக்கியமான புள்ளி. கண்ணன், கரும்பு, பூஞ்சோலை, ஜிங்லி, டமாரம் முதலிய சிறுவர் பத்திரிகைகளில் இவருடைய கவிதைகள் எத்தனையோ வெளிவந்திருக்கின்றன. இத்துடன் இவர் நிற்கவில்லை. பெரியவர்கள் பத்திரிகைகளிலும் எழுதியிருக்கிறார். இண்டர் வகுப்புவரை படித்த இந்த இளங்கவிஞர் பெருங் கவிஞர் பாரதியார் பிறந்த எட்டையபுரத்துக்கு அடுத்த எப்போதும்வென்றான் என்ற ஊரில் பிறந்தவர். நெல்லைக் கல்லூரியில் பயின்றவர். இருபத்தைந்து வயது நிரம்பியவர். சென்ற ஆண்டில்தான் இவருக்குத் திருமணம் ஆயிற்று. கண்ணனில் கவிதை எழுதுவதுதான் களிப்புத் தருகிறது என்று கூறும் இதே இளங்கவிஞரின் கவிதைத் தொகுப்பு ஒன்று விரைவில் வெளிவரவேண்டும் என்பதுதான் நம்முடைய ஆசையும். துங்கக் கரி முகத்துத் தூமணியே - இவருக்குச் சங்கத்தமிழ் மூன்றும் தரச் சித்தமாக இருப்பார் என்பது நிச்சயம். அவற்றையெல்லாம் கண்ணன் வாயிலாகச் சுவைக்கவும் நாம் சித்தமாக இருக்கிறோம்.

வி. வி. கிரி



சென்னையில் ராஜாஜியின் தலைமையில் ஏற்பட்ட முதல் மந்திரி சபையிலே தொழிலாளர் மந்திரியாக இரண்டு ஆண்டுகள் இருந்த வி. வி. கிரி அவர்கள் இப்பொழுது உத்தரப் பிரதேசத்தின் கவர்னராக இருந்து வருகிறார்.

பர்ஹாம்பூரில் (ஒரிஸ்ஸாவில்) 1894-இல் பிறந்தவர் இவர். சென்னையிலும் பிறகு அயர்லாந்து நாட்டின் தேசிய கலைக் கல்லூரி (நாஷனல் யூனிவர்ஸிடி)யிலும் பயின்றவர். பாரிஸ்டர் சட்டப் பரீட்சையில் தேறியவர். பல்லாண்டுகளாகத் தொழிற் சங்கத் தலைவராகத் தொண்டாற்றி வந்தவர்.

இவர் லண்டனில் நடந்த இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டுக்குத் தொழிலாளர் பிரதிநிதியாகவும், ஜினிவா (சுவிட்சர்லாந்து)வில் நடந்த உலகத் தொழிலாளர் மகா நாட்டுக்கு இந்தியத் தொழிலாளியின் பிரதிநிதியாகவும் சென்று கலந்துகொண் டிருந்திருக்கிறார். மத்திய சட்டசபை மெம்பராகப் பல காலம் பணி புரிந்திருக்கிறார். 1946-இல் ஏற்பட்ட மந்திரி சபையில் மீண்டும் மந்திரியாகப் பதவி பெற்றிருக்கிறார். இலங்கையில் இந்தியாவின் ஹைகமிஷனராகச் சில காலம் இருந்துவிட்டு, இந்திய சர்க்காரின் தொழிலாளர் மந்திரியாகவும் இரண்டு ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார்.

சிறந்த தொழிற் சங்கத் தலைவர்; இந்தியாவின் தொழிலாளர் இயக்கத்தின் பெரும் தூண் என்று இவரைக் கூறுகிறார்கள். அகில இந்திய ரெயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவராக இருந்து, இந்த நாட்டின் நெருக்கடியான நிலைமைகளை மாற்றியிருக்கிறார். அகில இந்தியத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகவும் இவர் இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். உள்ளத்திலே கள்ளமில்லாத சேவையுணர்ச்சியும் முகத்திலே அன்புப் புன்னகையும் நிறைந்த வி. வி. கிரி, நேருஜியின் சொந்த மாகாணமான உத்தரப் பிரதேசத்தின் சிறப்புமிக்க கவர்னராக இப்போது இருந்து வருகிறார்.

நீங்களும் நானும்

ஆர்வி

சு. ப. அண்ணுமலை, காரைக்குடி

கே: அமெரிக்கார்க்காரன் அயோக்கியன், ரஷ்யாக்காரன் மோசக்காரன், பிரிட்டிஷ்காரன் தப்பிலிக்காரன், இந்தியாக்காரன்—?

ப: இளிச்சவாயன்!

இ. கே. சுப்பிரமணி, இலஞ்சி

கே: கண்ணன் தபால் பகுதி மிகவும் உபயோகமான பகுதிதான். ஆனுல் அது முழுவதும் ஒரே பாராட்டும் புகழுரைகளுமாகப் பொங்குகின்றனவே தவிர, கண்ணனைக் கண்டித்து எழுதும் கடிதங்களுக்கு ஆகும் கதி என்ன? அதை அப்படியே ஒளித்துப் புதைத்துவிடுவீர்களோ?

ப: இல்லை; இந்தக் காலத்து மாணவ மாணவியர் மகா சாமர்த்தியசாலிகள். காக்காய் பிடித்தால் தான் காரியம் நடக்கும் என்று எண்ணுவதாகத் தோன்றுகிறது. ஒரு கடிதமாவது குற்றம் குறைகளைச் சுட்டிக் காட்டி எழுதப் பட்டிருக்க வேண்டுமே-கிடையாது. உன் கடிதத்தின் முதல் வரி உட்படத்தான் சொல்கிறேன். ஒரே புகழ்மாலையாக வந்தால் நான்தான் என்ன செய்வேன்? அதற்குள் நான்தான் பார்க்கப் போனுல் இப்போது புதைந்து கிடக்கிறேன்.

கே. வி. சாமி, புவனகிரி

கே: மூன்ருவது உலக யுத்தம் வரும், வரலாம் என்கிருர்களே! வரும் என்ருல் காரணம் என்ன? வராது என்ருல் எதனுல்?

ப: அரபு நாடுகளில் மக்களிடையே சுதந்தர எழுச்சி உண்டாகியிருக்கிறது. அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் வால் பிடிக்க அரபு நாட்டுமக்கள் விரும்பவில்லை. வால் பிடித்துக் கொண்டிருந்த மன்னர்களையும் மந்திரிகளையும் ஒழித்து விட்டு, புரட்சி செய்து புது சர்க்கார் அமைக்க முயல்கிருர்கள். எண்ணெய்ச் செல்வத்தை இது காறும் அநுபவித்து வரும் பிரிட்டனும், ருஷ்யாவை அடக்க முயன்று வரும் அமெரிக்காவும் அந்த அரபு நாடுகளிலே தங்கள் படைகளைக் கொண்டு வந்து இறக்கியிருக்கிருர்கள். அண்டை நாட்டிலே நெருப்பு என்ருல் அதை வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்க ரஷ்யா தயாராக இல்லை. திரும்பிப் போகிருயா, சண்டைக்கு வருகிருயா என்கிறது அது. இதனுல்தான் போர் மூளலாம் என்கிருர்கள், ஒரு வாரமாக. ஐக்கிய நாடுகள் சபையை மதியாமல் தாங்களே பிற நாட்டு விவகாரங்களில் பிரிட்டனும் அமெரிக்காவும் தலையிடுவதாக உலக மக்களும் நாமும் எண்ணுகிருேம். யுத்தம் வந்தால் இந்தக் காரணங்களினுல் வரலாம். ஆனுல் இப்போதுள்ள நிலையில் யுத்த நெருக்கடி இருந்தாலும், வராது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. முன் காலத்து யுத்தம் மாதிரி அல்ல தற்கால யுத்த முறைகள். இரண்டாவது உலகப் போர் மாதிரிகூட இல்லை. இது அணுயுகம். ரஷ்யாவிலிருந்த வாறே அமெரிக்காவையும் அமெரிக்காவிலிருந்தவாறே ரஷ்யாவையும் ஒரு நொடியில் அழித்து விடக்கூடிய ராட்சஸ ஹைட்ரோஜன் குண்டுகள் இப்போது இருக்கின்றன. மூன்ருவது யுத்தம் என்ருல் உலகில் பாதி இருந்த இடமே தெரியாமல் போனுலும் போய்விடும். வல்லரசுகள் அடியோடு அழிந்து போய்விடுவார்கள். முதலாளித்துவமும் இருக்காது; கம்யூனிஸமும் இருக்காது. எல்லாம் 'கோவிந்தா' வாகிவிடும். அப்படித் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ள அமெரிக்கக் கோஷ்டி நாடுகளும் தயாராக இல்லை; ரஷ்யக் கோஷ்டி நாடுகளும் தயா

ராக இல்லை: ஆகவே சண்டை, பேச்சுச் சண்டைக்கு மேல் போகாது; வராது என்று முக்காலே மூன்று வீசம் நிச்சயமாகச் சொல்லலாம்.

இரா. வானமாமலை. சென்னை-3.

கே: ஐ. ஸி. பி. எம். என்றால் என்ன?

ப: இண்டர் காண்டினெண்டல் பெய்லிஸ்டிக் மிஸ்ஸில் என்பதன் சுருக்கமே அது. கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் உபக்கிருகம் போன்ற குண்டுகளையே அப்படிக் குறிக்கிறார்கள்.

எஸ். அம்புஜம், குடந்தை

கே: இப்பொழுதுள்ள சிறந்த குழந்தைகள் பத்திரிகை எது?

ப: என்னைக் கேட்கிறாயே—கண்ணனைத் தவிர வேறு எது என்று நான் சொல்வேன்?

பி. ராமதுரை, கோயம்புத்தூர்

கே: இந்தியாவிலேயே வளப்பமான ராஜ்யம் எது?

ப: உத்தரப் பிரதேசம்தான். மற்ற ராஜ்யங்கள் இப்போது சிதறுண்டு போய்க் கிடக்கின்றன.

எல். சங்கர நாராயணன், ஈரோடு

கே: கோடை விடுமுறைக்கு நீங்கள் உதகமண்டலம் போக விரும்புவீர்களா, கோடைக்கானல் போக விரும்புவீர்களா?

ப: இரண்டு இடங்களுக்கும் போக நான் விருப்பமாட்டேன்: மண்டை வெடித்தாலும் என் சொந்த ஊருக்குத்தான் போக விரும்புவேன். மழை பொழிந்தாலும் நான் பிறந்து வளர்ந்த ஊரே எனக்குச் சொர்க்கம்.

கோ. மாசிலாமணி, திருச்சி-2

கே: பிரபலமானவர்களைப் பற்றிக் கேள்வி கேட்பதில் என்ன தவறு? அவர்கள் வாழ்க்கையில் எப்படி வெற்றி பெற்றார்கள் என்பதை அறிந்து கொள்வது அவசியமில்லையா?

ப: அவசியம்தான். காந்திஜி, நேருஜி போன்ற பிரபலமானவர்களைப் பற்றியோ ராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்ற பெரியவர்களைப் பற்றியோ கேட்டால் நமக்கு அது உபயோகமாகத்தான் இருக்கும். ஆனால் சினிமா நடிக நடிகையர்களாகப் பிரபலமானவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள அதிகம் என்ன இருக்கிறது? முகவெட்டும், உடற்கட்டும் இருந்தால் கூடப் போதவில்லை; அதிருஷ்டம்தான் அவசியமாக வேண்டியிருக்கிறது என்பதைத் தவிர அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலிருந்து நாம் வேறு என்ன தெரிந்து கொண்டுவிடப் போகிறோம்?

மார்ஷல் விக்டர், புதுச்சேரி

கே: முகப் பரு வருவதற்குக் காரணம் என்ன?

ப: அது ஒன்றும் விபரீதமானது அல்ல. வாலிப வயதில் சகஜமாக வரக்கூடியதுதான்.

எஸ். பி. சேதுராமையா, சூனே

கே; உங்கள் எழுத்தைப் படித்த பிறகுதான் உங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது. புகைப் படம் வெளியிட்டால் குறைந்தா போய்விடுவீர்கள்?

ப: குறைந்து போகமாட்டேன். ஆனால் அந்த நல்ல ஆசையைக் கெடுக்க நான் விரும்பாததால்தான் புகைப்படம் வெளியிட மறுக்கிறேன்.

பி. ஆர். குமார், பட்டுக்கோட்டை

கே: சிறுவர்களுக்கு எழுதும் சிறந்த எழுத்தாளர்கள் யார்?

ப: சிலர் இருக்கிறார்கள்; ஆனால் பெயர்களை வெளியிடுவதில் பல இடைஞ்சல்கள் இருக்கின்றன.

கே: கண்ணனில் எழுதும் சிறந்த கவிஞர்கள் யார்?

ப: சிலரை மட்டும் குறிப்பிடுகிறேன். தமிழ் ஒளி, அழ. வள்ளியப்பா, பூவண்ணன், கே. ஏ. நம்பி (சசிதேவன்) எ. ந. கணபதி, லெமன், தமிழழகன், ஆர். சரஸ்வதி முதலியோர்.

ஜி. கிருஷ்ணமூர்த்தி, சென்னை-5

கே: பாதசாரிகளுக்கு நடைபாதைகளில் நடக்கக்கூட இடமில்லை....

ப: ஆம்; அதனால்தான் ஆஸ்பத்திரிகளிலும் இடமில்லை!



திருநாளைப் போவார் நாயனார்

'கிங்கரன்'

காவிரியாற்றின் கிளை நதி கொள்ளிடம். அதன் கரையில்தான் ஆதனூர் என்னும் சிற்றூர் இருக்கிறது. வண்டல் படியும் அந்தச் சிற்றூரின் வளப்பத்திற்குக் கேட்பானேன்? எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று ஒரே பசுமை! நஞ்சை நிலங்கள்தான் அங்கே அதிகமாகையால் நெல்மணிகளை உதிர்த்த பின்னர் அந்த வைக்கோலைக் கொண்டே அவ்வூர் மக்கள் தங்கள் வீடுகளின் கூரைகளை வேய்ந்துகொண் டிருந்தனர். அந்த ஊர்ப் புலைச்சேரியில்

ஒருவர்: என் பையன் 208 மார்க் வாங்கிப் பெயிலாகி யிருக்கிறான். உன் பையன் 207 மார்க் வாங்கி பெயிலாகிப் யிருக்கிறான். என் பையனே தேவலாம் போல் இருக்கு!

—குஞ்சு

நந்தனார் என்பவர் வசித்து வந்தார். அவருக்குச் சிவபெருமானிடத்தில் அளவற்ற பக்தி.

அந்த ஊருக்கு அருகேயுள்ள திருப்புங்கூரில் கோயில் கொண்டிருந்த சிவபெருமானை எண்ணி மனம் உருகப் பாடுவார். அடிக்கடி சென்று கோபுர தரிசனம் செய்வார். கோயிலின் பக்கத்திலே பள்ளம் ஒன்று இருந்தது. பிறருக்குப் பயன்படும்படி, அதைக் குளமாகச் செய்து மகிழ்ச்சி கொண்டார்.

ஒரு நாள் அவருக்குச் சமீபத்திலுள்ள தில்லைக்குச் சென்று நடராஜப்பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் தோன்றிற்று.

நாளுக்கு நாள் அவருடைய ஆவல் அதிகமாயிற்று. ஆனால் அந்தக் காலத்தில் புலைச்சேரியில் தோன்றிய ஒருவர் ஆலயத்தினுள்ளே சென்று எம்பெருமானைத் தரிசிப்பது என்பது இயலுமா? இதை நினைத்து நினைத்து அவர் மனம் நெகிழ்ந்தது. இருந்தாலும் ஆவலால் தூண்டப்பட்டு, 'நாளைக்குப் போவோம், நாளைக்குப் போவோம்?' என்றே அவர் எண்ணி வந்தார். இதனாலேயே அவருக்குத் 'திருநாளைப் போவார்' என்ற பெயரும் வழங்கப்பட்டது.

கடைசியில் ஒரு நாள் எப்படியோ புறப்பட்டுத் தில்லையை அடைந்தார். நடராஜப் பெருமானின் திருக்கோயிலை வணங்கினார். ஆனால் உள்ளே வீற்றிருக்கும் பெருமானைத் தரிசிக்க இயலவில்லையே என் அவர் மனம் வருந்தியது. அன்றிரவே தில்லையம் பதியான நடராஜப் பெருமான் அவருடைய கனவில் தோன்றினார். மறுநாள் அந்தணர்கள் மூட்டும் தீயிலே மூழ்கி, பின்னர் வேதியர்கள் புடை சூழத் தம்மைத் தரிசிக்க வருமாறு கூறி மறைந்தார்.

தில்லை வாழ் அந்தணர்களுக்கும் பெருமான் கட்டளையிட்டார் போலும்! மறுநாள் கனவு நினைவாயிற்று. அந்தணர்கள் மூட்டிய தீக்குண்டத்திலே, திருநாளைப் போவாரும் சிறிதும் தயக்கமோ பயமோ ஏதுமின்றிக் கைகூப்பி, மூழ்கி எழுந்தார். அவர் வெளி வரும்போது மார்பிலே பூணூல் தோன்ற, தலையில் சடை முடி தெரிய, தேஜோமயமாக விளங்கினார். உடனே அம்பலக் கூத்தாடும் ஸ்ரீ நடராஜப் பெருமானை அடங்காத ஆவலோடு வணங்கினார். பின்னர் எல்லோரும் தெற்குக் கோபுர வாயிலை அடைந்தனர். ஆனால் என்ன ஆச்சரியம்! அங்கே திருநாளைப்போவாரைக் காணவில்லை. ஆண்டவனின் சந்நிதியை அடைந்துவிட்டதாகவே எண்ணி அனைவரும் மகிழ்ச்சி பொங்க வீடு சென்றனர். . .

'ஜனா'

20. ஒரே கல்லில் இரு காய்கள்

சிங்கராயன் பயந்து நடுங்கியவாறு சின்னக் காளி வேங்கையாரைப் பார்க்கச் சென்றான். அவர் அவனைக் கண்டு வழக்கம்போல் எரிந்து விழாமல், "என்ன சிங்கராயா!" என்று முகத்திலே புன்னகையோடு கேட்டார்.

சிங்கராயனுக்கே இது சிறிது விசித்திரமாக இருந்தது; ஆயினும் தோல்வியோடு திரும்பிய அவன் எப்படி அவரிடம் பேச்சைத் துவக்குவது என்று கையைப் பிசைந்துகொண்டு நின்றான். அவர் கோபத்தை மாற்றக்கூடிய செய்தி ஒன்று அவனிடம் இல்லாமலும் போகவில்லை. அதையே முதலில் கூற வேண்டும் என்று தேற்றிக்கொண்டுதான் அவன் வந்திருந்தான்.

ஆனால் சின்னக் காளி வேங்கையார் முகத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிந்துகொண் டிருந்தது. காரணம், ஆவூர்ச் சோழ அரசன் நலங்கிள்ளி அன்று காலையில் அவருக்கு ஓலையனுப்பி யிருந்தான். காளிகோட்டையின் முடிசூட்டு வைபவம் சம்பந்தமாக, சோழ அரசன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாக அந்த ஓலை அறிவித்தது. மேலும் அவரை நேரில் சந்தித்துப் பேச விரும்புவதாகவும் அதில் அவன் குறிப்பிட்டிருந்தான். நாக அரசனின் வருகையால் அவர் எதிர்பார்த்த காரியம் கைகூடி வரும்போலிருந்தது.

சிங்கராயனைப் பார்த்ததும் அவர், "இதோ பார்த்தாயா, சிங்கராயா, நம்முடைய திட்டம் பலித்துவிட்டதை! சோழ அரசனுக்கு இப்பொழுதுதான் அறிவு உதயமாகி யிருக்கிறது!" என்று கர்வம் பாதியும் கேலி பாதியுமாகக் கூறினார்.

அந்த ஓலையை விநயத்தோடு வாங்கிப் பார்த்தான் அந்தச் சேனைத் தலைவன். ஒரு முறைக்கு இருமுறையாக ஊன்றிப் படித்தான்; ஆயினும் அவன் முகத்திலே எந்தவித மாறு

தலும் ஏற்படவில்லை. சின்னக் காளி வேங்கையார் கூறியபடி சோழ அரசனது ஓலையின் வாசகம் அமைந்திருக்கவில்லை. இருந்தாலும் வேங்கையாரை மறுத்துப் பேச முடியாமல் அவன் மயங்கி நின்றான்.

நாக அரசன் இளநாகன் மட்டும் காளிகோட்டைக்கு விஜயம் செய்யாமல் இருந்திருந்தால் சோழ அரசனிடமிருந்து இத்தகைய ஓலை வந்திருக்குமா? வந்திருக்காது. சோழனின் மனம் இப்போது மாறுவதற்கு என்ன காரணம்? இதற்கு நாக அரசன்தான் பொறுப்பு என்று வேங்கையார் பெருமையாக எண்ணினார். காரியம் முற்றிலும் நிறைவேறும் வரையில் நாக அரசனைக் காளிகோட்டையிலேயே தங்கியிருக்கச் செய்ய வேண்டும் என்றும் எண்ணிக் கொண்டார்.

ஆனால் சிங்கராயன் அவ்வாறு எண்ணவில்லை. ஒரு வார காலமாக, நாகர் படையினர் நாட்டுக்குள் புகுந்து, உயிரையும் உடமையையும் சிறிதும் மதியாமல் கண்டபடி கண்ணியமற்ற முறையில் நடந்துகொண்டு வந்தார்கள். அவர்களுடைய அட்ட காசம் கட்டுமீறிப் போய்க்கொண் டிருந்தது. அவர்களுடைய

முறையற்ற செயலை அறிந்தும் சின்னக் காளி வேங்கையார் சும்மா இருந்து வந்தார். மக்களின் முறையீடுகளை அவர் கேட்கவுமில்லை; மதிக்கவுமில்லை.



"சிங்கராயா! என்ன பேசாமல் இருக்கிறாய்? இவர்களுடைய முறையீடுகளைக் கேட்டு, நாகர் படையினரை அடக்க எண்ணினால் இளநாகன் மனம் புண்பட்டுப் போகாதா? இப்பொழுது பார்! ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்! நம்முடைய காரியம் நல்ல முறையில் முடியும் வரையில் இளநாகனும் இந்த இடத்தை விட்டுப் போகமாட்டான்; இந்த நாட்டு மக்களுக்கும் இதனால் நல்ல பாடம் கற்பித்தாகிவிட்டது. இல்லையா, சிங்கராயா?" என்று கேட்டுவிட்டு, சின்னக் காளி வேங்கையர் இடி இடியென்று பயங்கரமாகச் சிரித்தார்.

சிங்கராயன் அவருடைய சிரிப்பிலே முதலில் கலந்து கொள்ளவில்லை." ஒரு கால் சோழ அரசர் ஓலையனுப்ப வேறு ஏதாவது காரணம் இருக்குமோ என்று சந்தேகப் படுகிறேன்! நாகர் படையினரின் அட்டகாசத்தைக் கேள்விப்பட்டுத்தான் தங்களோடு நேரில் பேச விரும்புகிறாரோ?" என்றான் அவன்.

"போடா! முட்டாள்! காளிகோட்டை மக்களைப்பற்றிக் கவலைப்பட அவருக்கு என்ன உரிமை? உனக்கு எதற்கு எடுத்தாலும் வீண் சந்தேகந்தான்! ஆமாம்; நீ போன காரியம் என்னவாயிற்று? அதைச் சொல் முதலில்!" என்று குரலை மாற்றிக் கொண்டு, கடுமை தொனிக்கக் கேட்டார் வேங்கையார்.

''வந்து..அந்தப் பொடியனும் கிழவனும் அகப்பட்டுக் கொண்டு விட்டார்கள். இப்பொழுது அவர்களைப் பாதாளச் சிறையில்தான் அடைத்து வைத்திருக்கிறோம்....''

''அருமை, அருமை! அப்படிச் சொல், நல்ல செய்திகளாக! ஆமாம்; அவர்களை நீ எவ்வாறு பிடித்துச் சிறை செய்து கொண்டு வந்தாய்?'' என்று கேட்டார் வேங்கையார்.

''நான் அந்த வேலைக்காரப் படைத் தலைவனை அனுப்பி யிருந்தேன். அவன் உடனே சென்று, எப்படியோ கொண்டு வந்து விட்டான்!'' என்றான் சிங்கராயன்.

''அப்படியானால் நீ கைது செய்யவில்லையா?''

சிங்கராயன் தலையைக் குனிந்துகொண்டு நின்றான், 'இல்லை' என்பதற்கு அடையாளமாக.

''உனக்குத்தான் அவ்வளவு சாமர்த்தியம் வந்துவிட்டதோ என்று பார்த்தேன்! ஆகட்டும்; யார் கண்டுபிடித்தால் என்ன! காரியம் ஆக வேண்டியதுதானே எனக்கு முக்கியம்? அதிலும் முக்கியமாகப் பிடிபட வேண்டிய இருவரும் பிடிபட்டு விட்டார் களே! அதுவே போதும்!'' என்றார் வேங்கையார்.

அந்தப் பொடியன் அவர் எதிர்பார்க்கும் பொடியனல்ல என்று சிங்கராயனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதை இப் போது சொல்ல அவனுக்குத் துணிவு உண்டாகவில்லை. அதை அவராகவே தெரிந்துகொள்ளட்டும் என்று பேசாமல் இருந்து விட்டான்.

''அது சரி; நீ போயிருந்த காரியம் என்ன? அவனை யார் என்று நீ அறிந்து கொண்டாயா? எனக்கு என்னவோ அவன் மீதுதான் அதிகச் சந்தேகமாக இருக்கிறது....''

''நான் போயிருந்தேன்..ஆனால்..'' என்று மெல்ல இழுத் தான் சிங்கராயன்.

''ஆனால் என்னடா ஆனால், எதற்கு எடுத்தாலும்? ஒரு காரியத்தையாவது ஒழுங்காகச் செய்து முடிக்க உனக்கு வழி தெரிகிறதா?'' என்று சீறி விழுந்தார் வேங்கையார்.

''ஆனால்..வந்து..நம்முடைய இளநாகனின் மகன் யாரென் பது மட்டும் வெகு பிரயாசைப்பட்டுத் தெரிந்துகொண்டேன். அந்த நெடுமாறனைப் பற்றித்தான் ஒன்றும் அறியமுடியவில்லை.''

''நெடுமாறன் இருக்கட்டும்; யாரோ இளநாகனுடைய மகன் என்றாயே, அவன் யார்?''

''அதுதான்..அதுதான்..அந்த'' - சிங்கராயனுக்கு அதற்கு மேல் பேச்சே எழும்பவில்லை.

''யார் அவன், உடனே சொல்லித் தொலையேன்!''

''அவனைத்தான் இப்போது உள்ளே அந்தக் கிழவனோடு அடைத்து வைத்திருக்கிறோம்!'' என்றான் சிங்கராயன்.

சின்னக் காளி வேங்கையாருக்குத் தூக்கிவாரிப்போட்டது. ''யார் அந்தப் பொடியன், இளநாகனுடைய மகனா? அவனா அந்தச் சிறு பொடியன்?''



''நீங்கள் குறிப்பிடும் பொடியனல்ல இவன். இவனும் நெடுமாறனோடுதான் கூடித் திரிகிறான். வயது பதினேழு அல்லது பதினெட்டு இருக்கும். நம்முடைய நாக அரசன் இளநாகனைப் பார்த்தால் அவனைப் பார்க்கவேண்டியதில்லை. தத்ரூபம் அதே சாயல்தான்; அதே அச்சுத்தான்!'' என்றான்.

''அவனையா உன்னைப் பிடித்து அடைக்கச் சொன்னேன்?'' என்று கோபாவேசத்தோடு கர்ஜித்தார் வேங்கையார்.

பிறகு, இளநாகன் வருகிறான் என்கிற ஜாடை தெரியவே, சட்டென்று குரலைத் தாழ்த்திக்கொண்டு, ''சரி போ! இந்த விஷயம் வெளியில் யாருக்கும் தெரிய வேண்டாம். நான் பிறகு வந்து பேசிக் கொள்கிறேன்!'' என்று அவனை விடை கொடுத்து அனுப்பினார் வேங்கையார்.

'உயிர் தப்பினோம், பிழைத்தோம்' என்று ஓடி வந்துவிட்டான் சிங்கராயன்.

21. கோட்டையில் இரு உருவங்கள்

கிட்டத்தட்ட இதே நேரத்தில் கோட்டையின் வெளிப்புறத்திலே ஓர் இளம் சிங்கம் ஒன்று அகழி ஓரமாக நின்றுகொண்டிருந்தது. அவன் நெடுமாறனாகத்தான் இருக்கவேண்டும் என்பதில் என்ன சந்தேகம்? வேறு யார் இத்தனை துணிச்சலாக, எதிரியின் கோட்டையை வந்து பயமின்றி ஆராயத் துணிவான்?

கோட்டை வாயில் கதவு பகல் எல்லாம் திறந்துதான் கிடந்தது. அகழியைக் கடக்கும் பாலமும் போடப்பட்டிருந்தது. ஆனால் கட்டுக் காவலும், வீரர்களின் நடமாட்டமும் அதிகமாக இருந்ததால், நெடுமாறன் அகழிக்கு அக்கரையில் அடர்ந்த புதரிடையே மறைந்துகொண்டு அமர்ந்திருந்தான்.

பொழுது ஏறி, இருள் பரவத் தொடங்கவே, கோட்டை வாயிலைப் பாதுகாப்போடு மூடிவைக்கத் தொடங்கினார்கள். கோட்டை மணியடித்ததும் காவலர்கள் பாலத்தை இழுத்து உயர்த்தி, கோட்டை வாயிலை மூடிவிட்டார்கள். இதுதான் ஏற்ற சமயம் என்று நெடுமாறன் எழுந்து நின்றான்.

ஆழ்ந்து விரிந்த அகழியோ உயர்ந்து உறுதியாக நிற்கும் கோட்டை மதிலோ அவனுடைய வேகத்துக்கு ஒரு தடையாகத் தோன்றவில்லை. ஆனால் நேரம் செல்வது ஒன்றுதான் அவன் பொறுமையைச் சோதனை செய்தது. செங்கணனும் கிழவனும் ஏரி கரை குடிசைக்குச் செல்லும் வழியில் எதிரிகளிடம் மாட்டிக் கொண்டு விட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டுத்தான் வந்திருந்தான்.

செங்கணனின் தாயிடம் விடை பெற்றுக்கொண்டு அவன் தன் குடிசைக்கு விரைந்து வரும் வழியிலேயே இளமாறன் இரைக்க இரைக்க ஓடி வருவதைக் கண்டு அவன் நெஞ்சம் துணுக்குற்றது.

''இளமாறு! என்ன இது, ஏன் ஓடி வருகிறாய்?''

''அண்ணா! நானும் பூசாரியாரும் தப்பிவிட்டோம். நாங்கள் தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்புவதற்குள் என் தாத்தாவையும் செங்கணனையும் அந்த வேவுகாரப் படையினர் பிடித்துக் கொண்டுவிட்டார்கள்!'' என்றான் இளமாறன்.

''இப்பொழுது அவர்கள் எங்கே?''

''சற்று முன்தான் அவர்களைக் காளிகோட்டைக்குக் கொண்டு போகிறார்கள். உடனே போனால்கூட அவர்களைப் பார்த்துவிடலாம், அண்ணா! அண்ணா..அதனால் நானும் உன்னுடன் வருகிறேன், அண்ணா!'' என்றான் இளமாறன்.

''வேண்டாம்; திரும்பிப் போய்க் குடிசையில் ஜாக்கிரதையாக இரு. இதோ இப்படியே நான் புறப்படுகிறேன்!'' என்று கூறிவிட்டு, நெடுமாறன் குதிரையைக் காளிகோட்டைப் பாதையில் திருப்பி முடுக்கினான்.

எவ்வளவோ வேகமாக வந்தும் அவன் முயற்சி வெற்றி பெறவில்லை. அவன் அகழிக்கு மறு புறத்தை யடைந்தபோது, கோட்டை வாயிலிலே குதிரை வீரர்கள் இருவர் கிழவனையும் செங்கணனையும் கட்டி இழுத்துச் செல்வது தெரிந்தது. அப்போது அவர்களைத் தொடர்ந்து செல்வது சரியல்ல என்றுதான் அவன் அங்கேயே ஒரு புதரருகே மறைவாகத் தங்கியிருந்தான்.

இருளாகி விட்டதால் இனிமேல் ஒரு கணமும் வீணாக்கலாகாது என்று அவன் கோட்டைக்குள் செல்லும் வழியைப் பற்றிச் சிந்திக்கலானான். அப்போது எதிர்க்கரையில் கோட்டை மீது இரு உருவங்கள் வந்து நின்றன. அவர்கள் யார், என்ன செய்கிறார்கள் என்று கவனித்தவாறு நின்றான் அவன்.

(தொடரும்)

"என்ன அப்படிச் சொல்றீங்களே! ஹூம்! என்ன வியாபாரம் நடக்கிறது தெரியுமாங்க கம்பெனியிலே?...தினம் குறைஞ்சது 500 ரூபாய்க்காவது சரக்குகள் விற்பனையாகும்! ஆமாம்!''

''அப்படியா!...ஆமாம், செலவு என்ன ஆகும்?......''

''பிரமாதமாச் செலவு ஒண்ணும் அப்படி ஆகலீங்க!''

''செலவு போக பாக்கி எவ்வளவு மிஞ்சும்னு கேட்கிறேன்..''

''எப்போதும் என் கம்பெனி வியாபாரத்திலே, லாபம் சரி பாதி நிச்சயம்! 500 ரூபாய் விற்பனை ஆனல், அதிலே 250 ரூபாய் நமக்கு லாபம்!''

''அடேயப்பா!...தினம் 250 ரூ. லாபம்னு மாசம் ரூ. 7,500 லாபம் கிடைக்கும்போலிருக்கு?''

'' 'போலே இருக்கு' என்ன சார்!......கிடைச்சுண்டுதானிருக்குன்னேன்!''

''சிப்பந்திகளுக்கும் நிறைய சம்பளம் கொடுக்கிறீங்க போலிருக்கு?''

''கொடுக்காம முடியுமா? மானேஜருக்கு 300 ரூபாய் சம்பளம்! குமாஸ்தாக்களுக்கெல்லாம் 100 ரூபாய்!''

''நிறைய குமாஸ்தாக்கள் இருக்காங்களோ?''

''ஏதேஷ்டமாக இருக்காங்க!... இருந்தும் போறல்லே! இன்னும் கூட நாலு பேர் இருந்தால் தேவலே போலிருக்கு!...''

இந்தச் சம்பாஷணையைக்

புதிரும் எதிரும்

கேஸி

கேட்டுக்கொண்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்த எனக்கு ஒரே குதூகலமாக இருந்தது! ஏனென்ருல் நான் சென்ற காரியம் எப்படியும் பலித்துவிடும் என்ற நம்பிக்கை தான்!

நான் அங்கே சென்ற காரியம் என்னவென்பதையும் சொல்லி விடுகிறேன். என் மைத்துனனுக்கு வேலை விஷயமாகவே நான் தேவி அண்டு கோ. முதலாளி செல்வம் செட்டியார் வீட்டிற்குப் போயிருந்தேன்.

வாசலில் இருந்த வேலைக்காரன், ''முதலாளி யாருடனே முக்கியமாகப் பேசிக்கிட்டிருக்காங்க!... சித்தே அப்படித் திண்ணையில் உட்காருங்க!'' என்று சொன்னதன் பேரிலேயே நான் திண்ணையில் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போதுதான் மேலே கண்ட சம்பாஷணை என் காதில் விழுந்தது.

செட்டியாரின் கம்பெனியில் குமாஸ்தாக்கள் தேவைப்படுகின்றனர் என்பதை அறிந்தபோது எனக்கு உண்டான குதூகலத்தில் ஆச்சரியம் என்ன?

ஆனல் அதே சமயத்தில் எனக்கு ஆத்திரமும் வந்தது! ''தொண தொணவென்று ஓர் ஆசாமி எத்தனை நாழிதான் பேசிக்கொண்டிருப்பான்! அவன் தொலைந்தால் அல்லவா நாம் செட்டியாரைப் போய்ப் பார்க்காலம்'' என்று அந்த வேலைக்காரனிடம் சொன்னேன்.

''அவர் போனப்புறம், இன்னொருவர் உங்கமாதிரி காத்திருக்காங்க, சார்! அவர் சந்திச்சிட்டுப் போனப்புறம்தான் நீங்க பார்க்கலாம்! அதுக்குள்ளே பறக்கிறீங்களே? அவர் பேசிட்டு வர எத்தனை நாழிகை ஆகுமோ, யார் கண்டாங்க?'' என்ருன் அவன்.

'அட கடவுளே!' என்று சலித்துக்கொள்வதைத் தவிர வேறென்றும் தோன்றவில்லை எனக்கு. அதே சமயம் உள்ளே பேசிக்கொண்டிருந்தவர் விடை பெற்றுக்கொண்டு கிளம்பிப் போய் விட்டார். அடுத்தவர் அவரைப் பார்க்கப்போனர். செட்டியாரை இன்னும் 10 நிமிடங்களில் சந்தித்துவிடலாம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டாயிற்று. திரும்பவும் என் இடத்திலே அமர்ந்துகொண்டேன். உள்ளே நடந்த சம்பாஷணை என் காதில் தெளிவாக விழுந்தது.

''கம்பெனி, ரொம்ப நஷ்டத்திலே ஓடுது, சார்!'' என்ருர் செட்டியார் பார்க்க வந்தவரிடம். அது மட்டும்தான?

''வியாபாரம் முன்போல் கிடையாது. மானேஜர் சம்பளத்தைக் கூட குறைச்சுட்டேன்! குமாஸ்தாக்களில் அநேகம் பேர்களைக்கூட நிறுத்திவிட்டேன். அப்படி இருந்தும் சமாளிக்க முடியவில்லை!... நீங்கள் என் மாதிரி நிலையில் இருந்தால், தற்கொலையே பண்ணிண்டு பிராணனை விட்டுவிடுவீர்!''

இதைக் கேட்ட என்னல் திடுக்கிடாமல் இருக்க முடியுமா? சில நிமிடங்களுக்குமுன் தம் கம்பெனியின் செல்வ நிலையைப்பற்றிப் பெருமையடித்துக்கொண்ட செட்டியார், திடீரென்று, தன் கம்பெனி ரொம்ப மோசமான நிலையில் இருப்பதாகச் சொல்லி அழுகிருரே! ஏன் இப்படி இரண்டு விதமாகப் பேசவேண்டும்?

நான் உடனே அங்கிருந்த வேலைக்காரனிடம் விஷயத்தைச் சொல்லி, ''உங்கள் எஜமானருக்குப் புத்தி மாருட்டம் உண்டோ?'' என்று கேட்டேன்.

அவன், நான் கேட்பதன் பொருளைத் தெரிந்துகொண்டவன் போல் கூறினன்: ''அதெல்லாம் ஒண்ணுமில்லே, சார்! முதல்லே வந்தவர் கடையை விலைக்கு வாங்கும் நோக்கத்தோடு வந்தவர். அவரிடம் அப்படித்தான் பேசியாகணும்!...இப்போ பேசிக்கிட்டு இருக்கிறவரு, டிக்கெட் விற்க வந்தவர். 'அனதை ஆசிரம நிதி'க்காகப் போடப் போருங்களே ஒரு டிராமா! அதுக்கு டிக்கெட்டு விற்க வந்திருக்காரு!....இப்போ, புரிஞ்சுதுங்களா?'' என்ருன் நிதானமாக.

கம்பெனியை வேருெருவருக்கு விற்றுவிட்டுச் செல்லும் நிலையில் உள்ளார் முதலாளி. இந்த நிலையில் வேலை கொடுக்கும்படி போய் நின்ருல் எப்படியிருக்கும்? பேசாமல் வந்த வழியே வீடு சென்றேன்.

'பிரிவுபசாரம்'

கே.வி

காட்சி—1

இடம்: மாணவர் விளையாட்டுக் கிளப்.

பாத்திரங்கள்: கிட்டப்பா, பாலு, சம்பந்தம், சுந்தரம், காரியதரிசி கண்ணன்.

(மாலை பந்தாட்டம் முடிந்து மெம்பர்கள் அனைவரும் ஒருங்கே அறையில் கூடுகிறார்கள்)

பாலு: அப்பாடா! இடுப்பை ஒடிச்சிட்டியே, அப்பா, இன்று ஆட்டத்திலே! வீட்டில் 'மதர்' எல்லாம் சினிமாவுக்குக் 'கேம்பு'. கொஞ்சம் ஜாலியா சீட்டுக்கச்சேரி ஓர் ஆட்டம் நடத்தலாம்!

(காரியதரிசி கண்ணன் வருகிறான்)

கண்: தோழர்களே! அடுத்து வரும் இருபத்தி ஆறும் தேதி நமது கிளப் பிரசிடென்டாகப் பணியாற்றி வரும் நண்பர் ரகுவின் தகப்பனார் அவர்கள் வேலை மாற்றலாகி, திருச்சி போகிறார். ரகுவுக்கும் இந்த ஊரில் படிப்பு முடிந்துவிட்டது. எனவே நமது கிளப் சார்பில் ரகுவுக்கு டீ பார்ட்டி ஒன்று நடத்தவேண்டும் என்பது சில பேர்களின் ஆவல்!

சம்: டீ பார்ட்டியா? வெரிகுட். வெரிகுட், என்றைக்குப் பிரதர்? நான் நிச்சயம் வந்து விடுகிறேன். அன்று எனக்கு 'எங்கேஜ்மெண்ட்' ஒண்ணும் இல்லை.

சுந்: டீ பார்ட்டின்னா, சார்! அட்லீஸ்ட்டு ஒரு டபிள் ஸ்வீட், ஒரு காரம், ஒரு காபி அல்லது ரோஸ் மில்க், ஒரு பீடா, ஒரு பூச்செண்டு, ஒரு....

கிட்: டேய்....டேய்.... போதுண்டா. ரொம்ப நீட்டாதே.

(முத்தையன், கோவிந்தன் இருவரும் இதனைக் கேட்டுக்கொண்டே வருகிறார்கள்)

முத்: என்ன, எல்லாரும் டிபன் கடலில் மூழ்கி விட்டீர்கள் போலிருக்கிறது! என்ன சங்கதி?

சம்: நம் பிரசிடெண்ட் இல்லே, அவருக்கு...ஸாரி, அவர் தகப்பனார் டிரான்ஸ்பர் ஆகிப்போகிறார். ரகுவுக்கு ஒரு டீபார்ட்டி நம்ப கிளப்பிலே தர்றாங்களாம். என்னென்ன 'ஐட்டம்' இருந்தால் நல்லது என்று திருவாளர் சுந்தரம்

திருவாய் மலர்ந்து அருளி ஞர்கள்.

கோவி: ஆகா! டீ பார்ட்டி என்றால் வெறும் ஸ்வீட், காரம் காபியோடு நிறுத்தி விடுவது அவ்வளவு நல்லா இருக்காது சார். தோழர் ரகு என்றால், அவர் மதிப்பென்ன? போக்கென்ன? வரவென்ன? செலவு என்ன? இருப்பு என்ன?

கிட்: டேய்..டேய்..

முத்: ஆமாம் சார். அத்தோடு நின்றால் பிரயோஜனமில்லை. ஒரு 'குரூப் போட்டோ' நம்ப கிளப் மெம்பர்களோடு எடுத்தால் பிரமாதமாயிருக்கும்! இல்லையா, பிரதர்?

பாலு: ஆமாம்.ஆமாம்; வெகு பிரமாதமாயிருக்கும். நம்ப வீட்டுக்குப் பக்கத்திலே காலேஜ் சாம்பியன் ஒருத்தர் இருக்கார். அவர் 'வின்' பண்ணிய கப், ஷீல்டு எல்லாம் நிறைய வைத்திருக்கார். நான் கடன் கேட்டால் இல்லையென்று சொல்ல மாட்டார். இரண்டு மூணு கப்பு, ஒரு ஷீல்டு எல்லாம் நான் வாங்கி வந்து விடுகிறேன். நாலைந்து 'பாட்மிண்டன்' ராக்கெட்டைக் குறுக்கும் நெடுக்குமாக வைத்துப் போட்டோவை பிடித்துவிட்டால் போச்சு. ஆகா!

சம்: பேஷாப் போச்சு! எனக்குக் கூட நம்ப ஊர் 'ஹிண்டு' ரிபோர்ட்டர் ரொம்ப 'பிரண்டு!' அவரையும் நம்ப பார்ட்டிக்கு 'இன்வைட்' பண்ணி அவரை 'ஜில்' படுத்திவிட்டால் மறுநாளே பேப்பரிலே 'ஸ்போர்ட்ஸ்' காலத்திலே, பிரமாதமா போட்டோவோடு நம்ப செகரெட்டரியோட 'பேர்வெல் அட்ரஸூம்' வந்துவிடும். நம்ப கிளப்புக்கும் ஓர் அட்வர்டைஸ்ட்மென்ட் மாதிரி!

முத்: ஆகா! என்ன, பிரில்லியண்ட் ஐடியா! இதோடு நம்ப சொந்தப் பொறுப்பிலே ஒரு காரியம் செய்கிறேன், சார்! நீங்க விழாவுக்குத் தேதி குறிப்பிடுங்க! நான் நாளைக்கே லெட்டர் எழுதி, கும்பகோணம் கோகிலத்தை வரவழைத்து விடுகிறேன். பாடினால் இன்னிக்குப் பூரா கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

பாலு: ஆமா! காதிலே பஞ்சை அடைச்சிண்டு!

முத்: பாலு! நீ என்ன அப்படிச் சொல்லிட்டே! நீ அவள் பாட்டைச் சரியாகக் கேட்டதில்லை. என் 'அக்கா மேரேஜ் ரிஸப்ஷ'னுக்குப் பாடியிருக்காள், பாரு! மேடையிலே சரியா சாயந்தரம் ஆறு மணிக்கு உட்கார்ந்ததுதான், சரியா ராத்திரி...11 மணி...கச்சேரி முடிஞ்சு எழுந்திருக்கும்போது!

சுந்: ஆமா! பக்க வாத்தியங்கள்......

முத்: அதற்கென்ன! மிருதங்கத்துக்கு நம்ப வரதப்ப பிள்ளையையும் பிடிலுக்கு..ஆமா பிடிலுக்குத் தான் ஆள் ஏற்பாடு பண்ணனும்.

கிட்: அதெல்லாம் எதற்கு? வெறும் சினிமாப்பாட்டையே பாடச் சொல்லிவிட்டு, வரதப்ப பிள்ளையைச் சும்மா மிருதங்கத்தை ரெண்டு தட்டச் சொல்லிட்டா போச்சு. இதுக்குப் பிடிலும் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம்! நம்ப ராஜுவைக் கஞ்சிரா வாசிக்கச் சொல்லிட்டா சரி. கஞ்சிராவுக்கும் மிருதங்கத்துக்கும் தனி ஆவர்த்தனம் விட்டால் போதும்.

பாலு: ஏற்கனவே இடிந்து இருக்கும் நமது கிளப் அறை ஒரேயடியாகச் சரிந்துவிடும்!

(இதுவரை மூலையில் இவர்கள் பேச்சையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த காரியதரிசி கண்ணன் பேசத் தொடங்கினார்.)

கண், தோழர்காள்! உங்களுடைய திட்டங்கள் எல்லாம் மிகப் பிரமாதமாயிருக்கின்றன. உங்கள் ஆர்வம் கண்டு நான் பெருமைப்படுகிறேன். நீங்கள் பேசியவையெல்லாம் வீண் அரட்டையல்லவென்று எண்ணுகிறேன். நீங்கள் போட்ட திட்டங்களுக்கெல்லாம் செலவு என்ன ஆகும் என்று யாராவது யோசித்துப் பார்த்தீர்களா? நமது கிளப் நிதி நிலைமை எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான்....

பாலு: (குறுக்கிட்டு) என்ன ஆகிவிடப் போகிறது, பிரதர்? ஆப்டர் ஆல் போட்டோவுக்கு ஒரு

இருபது ரூபாய்; டிபனுக்குப் பத்து; மாலே போக்குவரத்துக்கு ஒரு ஐந்து; கச்சேரிக்கு..

முத்: அதை வேணுமானுல் நான் கொஞ்சம் பார்த்துச் சரி செய்து கொள்கிறேன்.

பாலு: அதென்ன அப்படிச் சொல்றே? போகவர ரெயில் சார்ஜ் செலவாவது கிளப் சார்பில் கொடுக்க வேண்டாமா? செகரெட்டரி சார்! எல்லாம் சேர்ந்து 'பார்ட்டிருபீஸ்'தான் ஆகும். கிளப் நிதியில் ஜமாய்த்து விடுவோம்! ஜமாய்த்து!

கண்: என்ன! கிளப் நிதியா? அது வேறு இருக்கிறது என்ற நினைப்பா? இன்றைய நிதி நிலைமை இரண்டு ரூபாய் இருபது நயா பைசா!

சம்: பின் எப்படித்தான் டீ பார்ட்டி 'அரேஞ்' பண்றது?

கண்: மெம்பர்களுக்குள் செலவாகும் பணத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டியதுதான்!

எல்லோரும்: என்ன? ! !

கண்: என்ன விழிக்கிறீர்கள்? திட்டங்கள் பிரமாதமாகப் போட்டீர்களே?

சுந்: ஹி..ஹி.. கிளப் பண்டு இருக்குமே என்று..

கண்: அதைத்தான் தஞ்சாவூருக்குப் 'பாட்மிண்டன் டோர்னமெண்'டில் கலந்து கொள்ளப் போனபோது, பண்டில் பாதிக்கு மேல் 'ஸ்வாஹா' ஆகி விட்டதே!

பாலு: சரி, சார்! எனக்கு நேரமாகி விட்டது. வீட்டில் தலைக்குமேல் வேலை இருக்கிறது. வருகிறேன்.

கண்: இருங்கள், சார். ஒரு வழியா 'டிஸைட்'ட் பண்ணிட்டுப் போகலாம்.

பாலு: ஆமாம், முடிவு என்ன சொல்கிறீர்கள்?

சம்: என்ன சொல்வது? நமது கிளப் மெம்பர்கள் 14 பேர். சந்தா கொடுப்போர் 9.

(எல்லோரும் பற்பல யோசனைகள் கூறுகிறார்கள். முடிவில் மெம்பர்கள் ஆளுக்கு இரண்டு ரூபாய் வீதம் பணம் கொடுப்பது என்று தீர்மானம் செய்து விட்டுச் சர்க்குலரில் கையெழுத்திட்டுக் கலைகிறார்கள்)

காட்சி—2

(இரண்டு நாட்கள் கழித்து)

இடம்: கிளப் கட்டடம்

பாத்திரங்கள்: பாலு. ராமன்.

(காரியதரிசி கண்ணன் வருகிறான்)

கண்: என்ன! ஆட்கள் ஒருவரையும் காணவில்லை!

ராம: ஆமாம், பிரதர்! ஏன் ஒருவரையும் காணவில்லை?

கண்: வாய்யா வா! விஷயம் தெரியுமா?

ராம: ஓ! எஸ்! தெரியும் மிஸ்டர்! பாலு எல்லாம் விவரமாய்ச் சொன்னான். நான் நாளை பணம் தந்து விடுகிறேன்.



தந்தை: ஏண்டா, கடைக்குப் போய்,'மிக்சர்'வாங்கி வரவல்லியா?

பையன்: சீட்டைக் கொடுத்து 'மிக்சர்' கேட்டா, பொட்டலம் கட்டித் தராமல் ஒரு சீசாவில் மருத்துத் தண்ணீயைத் தர்றாங்க,அப்பா.

கண்; மிஸ்டர் பாலு அண்டு ராமன், நீங்க ரெண்டு பேரும் மற்றவங்களைத் தயவு செய்து பார்த்துப் பணத்துக்குக் கொஞ்சம் 'அர்ஜ்' பண்ணுங்க. நான் வேறு முட்டாள்தனமா மிஸ்டர் ரகுவிடம் டீ பார்ட்டியைப் பற்றிப் பிரமாதமாகச் சொல்லிவிட்டேன். இவ்வளவு தூரம் பிரமாதமாகப் பேசிவிட்டுக் கடைசியில் ஒன்றும் செய்ய வில்லையென்றால் நன்றாயிருக்குமா?

பாலு: ஆமா! ஆமாம். நம் கிளப்பின் மதிப்பென்ன, போக்கென்ன, வரத்தென்ன, இருப்பென்ன, வரவென்ன, செலவு என்ன?

கண்: நேற்று விசாரித்தேன். முத்தையன், கோவிந்தன், ராஜாங்கம் மூணு பேரும் போட்டோ செலவைப் பார்த்துக்கிறாங்களாம். டிபனுக்குத்தான் நாம் அரேஞ் பண்ணனும். மிஸ்டர் ராமன், பார்ட்டீன்னா சார், நம்ப கிளப் பைனான்ஸ் நிலைமையோ ரொம்பத் திண்டாட்டமாயிருக்கு. அதனாலே பார்ட்டியின் போது நம்ம ஊரிலே யிருக்கிற முக்கிய தலைகள் நாலஞ்சு பேரை, டாக்டர், டிப்டி தாசில்தார், ஸப்இன்ஸ்பெக்டர் இது மாதிரி பெரியவாளையெல்லாம் 'இன்வைட்' பண்ணி, டிபனையும் கொடுத்து, மாலையையும் அவர்கள் கழுத்திலே போட்டு, பிரமாதமாப் புகழ்ந்து பேசிட்டா உச்சிக் குளிர்ந்திடும்...

ராம: அப்படியே அவர்கள் பிள்ளைகளையும் கிளப்பிலே இழுத்துண்டு அவர்களில் ஒருவரைப் பிரசிடெண்டாப் போட்டுட்டு, 'சப்ஸ்கிரிப்ஷன்' நோட்டையும் முதல் தேதி நீட்டினோம்னா ஒவ்வொருத்தரும் ஐந்துக்குக் குறைந்து கையெழுத்துப் போடமாட்டங்க! கிளப்பும் ஏதோ ஒரு மாதிரியா 'ரன்'பண்ணிகிட்டு கிடக்கும்! என்ன மிஸ்டர்! எப்படி ஐடியா?

கண்: 'வெரிகுட்!' மிஸ்டர் ராமன்! அதேதான்.

பாலு: 'ப்யூட்டிபுல்' சார்!

(போகிறார்கள்)

காட்சி—3

இடம்: கிளப் கட்டடம்

பாத்திரங்கள்: மெம்பர்களில் ஏழெட்டுப் பேர் திரண்டு வந்திருந்தனர். கண்ணன் ஒரு மூலையில் சோர்ந்து அமர்ந்திருக்கிறான்.

பாலு: என்ன சார்! எவ்வளவு ரூபாய் வசூலாச்சு? நாளைக்கு டீபார்ட்டி என்று சொன்னீர்களே!

கண்: ஹூம்!.. (பெருமூச்சு விடுகிறான்)

சம்: முத்தையன், ராஜாங்கம், கோவிந்தன் அவர்கள் எல்லாம் எங்கேயப்பா?

சுந்: இது தெரியாதா, முத்தையன் திருச்சிக்குப் போய் நான்கு நாட்கள் ஆச்சு. கோவிந்தனுக்குக் கிராமத்தில் வயல் அறுவடையாம்! அப்பாவுடன் ஊருக்குப் போய் விட்டான். ராஜாங்கம் சமாசாரம் தெரியவில்லை.

பாலு: சரி, போட்டோ எடுத்தாப்போல்தான்!

கிட்டு: டிபனாவது உண்டா இல்லையா? காரியதரிசி மூச்சுக்கூட விடமாட்டார் போல இருக்கிறதே! சார், நாங்கள் நாலு பேர், என். ஜி. ஓக்கள் பிள்ளைகள். மாதம் பிறந்ததும் சொன்னபடி தந்து விடுகிறோம். நீங்கள் முடிந்தால்

முன் பணம் போட்டுச் செய்து விடுங்கள்.

பாலு: வசூல் எவ்வளவு சார்?

கண்: நீங்கள் கொடுத்த ரூபாய்தான் முழுவசூல். எல்லாம் திட்டம் போடுவதில்தான் நிபுணர்கள். காரியத்தில் ஊஹூ..

கிட்: அப்படியென்றால் பார்ட்டி அவ்வளவுதானா? 'ச்சு. ச்சு.' என்ன கிளப் சார் இது! கடைசியில் ஒரு ஸ்மால் பார்ட்டிக்கு ஈடு கொடுக்க முடியவில்லையே!

சம்: இந்த ரூமையே நன்றாக அடைத்துக் கட்டி வெறும் பேட்மிண்டன் மாத்திரமில்லாமல், ஒரு கேரம், ஒரு செஸ், ஒரு சீட்டாட்டம், மூலையில் சின்ன லைப்ரரி, வீக்லி அண்டு மந்த்லி மேகசைன்ஸ், ஒரு ப்யூன் இதெல்லாம் போட்டா என்ன பிரமாதமா யிருக்கும்! அதிகம் வேண்டியதில்லை. 20 மெம்பர்ஸ் இருந்தால் போதும். மாதம் 2 ரூபாய் சந்தா கொடுத்தால் போதும். நம்ப செகரெட்டரி 'மானேஜ்' பண்ணிடுவார்.

சுந்: பேஷ். எங்கேயாவது பிளானிங் கமிஷன் எதிலியாவது அட்வைஸராகப் போடலாம் உன்னை! அருமையான பிளான் எல்லாம் போடறியே!

ராம: அதெல்லாம் கிடக்கப்பா. நாம் இவ்வளவு தூரம் கூத்தடித்து விட்டுப் பார்ட்டி இல்லையென்றால் மிஸ்டர் ரகு என்ன நினைப்பான்?

பாலு: நான் ஓர் உருப்படியான யோசனை சொல்கிறேன்.

எல்லோரும்: (ஆவலுடன்) என்ன? என்ன?

பாலு: நாம் எல்லோருமேதான் ஈவினிங் டிபன் சாப்பிடுகிறோம். குறிப்பிட்ட தேதி அன்று அவரவர்கள் சாப்பிடும் டிபனை இங்கே எடுத்து வந்துவிட்டால் எல்லோரும் இங்கேயே ஜாலியாகச் சேர்ந்து சாப்பிட்டுவிடலாம். டீ பார்ட்டி ஆனது மாதிரி இருக்கும்.

(மூலையிலிருந்து 'சபாஷ், பாலுவின் மூளையே!' என்ற கூக்குரல் எழுகிறது)

ஒரு குரல்: ஆமாம், நம்ம எல்லோரும் எடுத்து வந்துவிட்டால் "சீப் கெஸ்ட்' என்ன பண்ணுவார்?

மற்றொரு குரல்: நாமெல்லாம் நம் டிபனில் கொஞ்சம் கொஞ்சம் பங்கு கொடுத்தால் போகிறது.

ராம: நோ.. நோ.. என்ன இவ்வளவு 'சில்லியா' இருக்கீங்க! மிஸ்டர் ரகுவின் போக்கென்ன, வரத்தென்ன, இருப்பென்ன, வரவென்ன, செலவென்ன!

கிட்: சும்மா வெட்டிப் பேச்சுப் பேச நேரமில்லை. சட்டுப்புட்டென்று ஓர் ஐடியா சொல்லுங்கள்.

சம்: நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? மிஸ்டர் கண்ணனை, யார் மிஸ்டர் ரகுவிடம் எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை என்று பார்ட்டி சமாசாரத்தைப்பற்றிப் போய்ச் சொல்லச் சொன்னார்கள். எனவே அவர்தான் பார்ட்டி செலவு பூராவுக்கும் பொறுப்பு ஏற்கவேண்டும்.

எல்லோரும்: ஆமாம். கண்ணன்தான் பார்ட்டியைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

கண்ணன்: ஆ! எல்லோரும் என் தலையில் மிளகாய் அரைத்து விட்டீர்களா?

(மயக்கம் போட்டுச் சாய்கிறார்)

(திரை)

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்

ஆயிரம் ரூபாய்ப் பரிசுக் கதை

பி. கே. சாமி

அந்த நகரின் எல்லையில் கம்பீரமாக நின்றது தனவந்தர் மாணிக்கம் அவர்களின் பங்களா.

அன்று அந்த மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை. அன்று அதிகாலையிலிருந்தே பிச்சைக்காரர்கள் சாரி சாரியாக அந்த இடத்தை நோக்கிச் சென்று பங்களாவை ஒட்டிக் குழுமியிருந்தார்கள்.

காரணம், தனவந்தர் மாணிக்கம் அவர்களின் ஓர் அபூர்வமான அறிவிப்பேயாகும். அது வருமாறு:

''கடைசி வெள்ளியாகிய இன்று என்னுடைய இல்லத்தில், ஆயிரம் பிச்சைக்காரர்களுக்குத் தர்மம் வழங்கப்படும். காலை ஒன்பது மணி முதல் மாலை ஆறு மணி வரை நடைபெறும். இந்தக் கொடை நிகழ்ச்சியில், முதலில் வருகிற பிச்சைக்காரன் ஒரு நயாபைசா தர்மம் பெறுவான்; இரண்டாமவன் இரண்டு நயாபைசா பெறுவான்; மூன்றாவது நபருக்கு மூன்று. இவ்விதமாக நூறாவது வருகிற பிச்சைக்காரனுக்கு நூறு நயாபைசா (அதாவது ஒரு ரூபாய்) கிடைக்கும். ஆயிரமாவது நபராக வருகிறவனுக்கு ஆயிரம் நயாபைசா கொடுப்பதுடன் தர்மம் நிறுத்தப்படும்.''

* * *

நினைத்துப் பார்த்தால் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது அல்லவா? ஏதோ விளையாட்டுப் போலவும் தோன்றுகிறது அல்லவா?

ஆனால் தனவந்தருக்கு அது வேடிக்கையாகவும் இல்லை; விளையாட்டாகவும் இல்லை.

மேலே கண்ட ஏற்பாட்டின்படி கொடுத்து முடிப்பது என்றால்

மொத்தம் ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் ஆகுமே! ஐயாயிரம் ரூபாய் இலேசான காரியமா, என்ன?

ஆனாலும் அவர் இவ்விதம் தர்மம் செய்கிறார் என்றால், ஏதாவது காரணம் இல்லாமல் இருக்குமா? எந்த மகானாவது, அல்லது ஜோதிடராவது அத்தகைய கைங்கரியம் அவசியம் என்று எடுத்துச் சொல்லியிருக்கலாம் அல்லவா?

அல்லது பிள்ளை இல்லாக் குறையைப் போக்க ஒரு பரிகாரமாக இதை மேற்கொண்டிருக்கலாம் அல்லவா?

இப்படித்தான் நகரமக்கள் ஆங்காங்கே தமக்குள் நினைத்தாலும், பேசினாலும், உண்மை அப்படி இல்லை.

உண்மையில் நடந்ததே வேறு!

* * *

ஒன்பது மணி ஆலைச் சங்கு ஊதியது. தனவந்தரின் மாளிகை மீது ஓரிடத்தில் கட்டித் தொங்கிய மணியும் ஒன்பது முறை ஒலித்துவிட்டு ஓய்ந்தது.

குறிப்பிட்ட இடத்தில் அமைத்திருந்த மேடையில் தனவந்தர் வந்து அமர்ந்தார்.

காரியஸ்தர், கூடியிருந்த பிச்சைக்காரர்களை நோக்கி, "இப்போது நீங்கள் ஆயிரம் பேர் சேர்ந்திருக்கிறீர்கள். ஒவ்வொருவராக வரிசையாக வந்து தர்மம் வாங்கிப் போகலாம். முதலில் வருகிறவனுக்கு ஒரு பைசா, இரண்டாவது வருகிறவனுக்கு இரண்டு, மூன்றாவது வந்தால் மூன்று, இப்படியாக ஆயிரம் பேர்களுக்கும் கொடுக்கப் போகிறோம். வரிசையாக, ஒவ்வொருவராக வாருங்கள்?" என்று அறிவித்துவிட்டு அகன்றார்.

அவ்வளவுதான்! கூடியிருந்த அத்தனை பேரிலும் ஒருவனாவது முன்னேறிச் சென்று வாங்க முன்வரவில்லை! எப்படி வருவான்?

முதலில் சென்றால் ஒரு பைசா தானே கிடைக்கும்? கடைசியில் போனால் மொத்தமாக வாங்கலாமே! அவன் போகட்டும் என்று இவன் நினைக்க, இவன் போகட்டும் என்று அவன் நினைக்க, ஒருவருமே வாங்க முற்படாமல், அசைவற்று நின்றார்கள். தமக்குள்ளேயே ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

இப்படியே நேரம் போய்க் கொண்டிருந்தது. மணி பத்து, பதினொன்று, பன்னிரண்டும் ஆயிற்று.



''ஏன் சார், உங்களை இப்போது வீட்டிலேயே காண முடிகிறதில்லை?''

''இரண்டு மாதமாக ரேடியோ வாங்கினதிலிருந்து வீட்டிலே தொந்தரவாக இருக்கிறது, சார்! அதுதான் வெளியே வந்துவிடுகிறேன்!''

''ஓகோ, ரேடியோ சங்கீதம் அதற்குள்ளே தலை வேதனையாய்ப் போச்சா?''

''அதற்கில்லை சார்! ரேடியோக் கடைக்காரன்தான் பெரிய தலைவேதனை கொடுக்கிறான்! பண வசூலுக்குத் தினமுமா ஆள் அனுப்பித் தொலைக்கிறது?''

—பி. கே. எஸ்., தூத்துக்குடி.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கும் ஆகிவிட்டது.

அப்போதும் யாரும் முன்வரவில்லை!

ஐந்துமணி ஐம்பத்தொன்பது நிமிஷம் ஆனபோதுகூட ஒருவரும் அருகில் செல்லவில்லை!

ஆறு மணி ஆலைச் சங்கு அலறியது!

தனவந்தர் எழுந்தார்; பெட்டியுடன் மாளிகையினுள் மறைந்தார்.

வந்திருந்த பிச்சைக்காரர்கள் அனைவரும்,—ஆம், அந்த ஆயிரம் பேர்களும்— மௌனமாக வெளியேறினார்கள் அந்த இடத்தை விட்டு.

சில நிமிஷங்களில் அந்தப் பங்களா மைதானம் வெறிச்சென்று ஆகிவிட்டது! கலகலப்பும், சலசலப்பும் ஒய்ந்து பூரண அமைதி.

* * *

தனவந்தர் மாணிக்கம் தமது காரைக் கொண்டுவரச் செய்து அதில் அமர்ந்து நகருக்குள் புறப்பட்டார்.

பிரதான வீதியில் இருந்த ஒரு கடை முன் கார் நின்றதும் உள்ளே சென்ற மாணிக்கம், என்ன செட்டியார்வாள், இன்றைக்கு முழுவதும் பிச்சைக்காரன் ஒருவனாவது உங்கள் கடை வாசலுக்கு வந்தானா?'' என்று கேட்டார்.

''இல்லையே!'' என்றார் செட்டியார், குரலில் ஆச்சரியம் தொனிக்க.

''அப்படியானால் எடுங்கள், பந்தயம் பத்து ரூபாயை!'' என்று அந்தக் கணமே வாங்கிக்கொண்டு அகன்றார்.

அடுத்தபடி ஒரு கடையிலும் அவ்விதமே எடுத்துக்கூறி பந்தயம் பேசிய பத்து ரூபாயை வாங்கினார்.

இப்படியாக நூறு கடைகளில் பத்துரூபாய் வீதம் வாங்கி, ஆயிரம் ரூபாய் சேர்த்துக்கொண்டு ஒரே மணி நேரத்தில் தம் பங்களாவுக்குத் திரும்பினார் தனவந்தர் மாணிக்கம்.

* * *

கடைசி வெள்ளியன்று ஆயிரம் பேர் போல் வரும் பிச்சைக்காரர்களை எப்படி நாள் பூராவும் வராமல் தடுக்க ஒருவரால் முடியும் என்ற அலட்சியமான நினைப்பில் அத்தனை பேரும் பந்தயம் கட்டினார்கள்; உண்மை. தோற்றார்கள்; அதுவும் உண்மைதான்.

தனவந்தர் மாணிக்கம் அவர்களுக்கு 'ஆயிரம் ரூபாய்ப் பரிசு' கிடைத்த காரணத்தால் இது 'ஆயிரம் ரூபாய் பரிசுக் கதை' என்பதும் பொருத்தமே அல்லவா? . .

ஏழு சகோதரிகள்

திருச்சி வாசுதேவன்

காட்டிலே வசித்துவந்த கிழவன் ஒருவனுக்கு ஏழு பெண் குழந்தைகள். அந்தக் குழந்தைகளுக்குத் தாயார் கிடையாது. அவள் இறந்துவிட்டாள். அவர்களைப் பராமரிக்கக் கிழவன் மிகவும் சங்கடப்பட்டான்.

ஆகையால் அந்தக் கிழவயதில் ஒரு பெண்ணை மணந்து கொண்டான். ஆனல் அவனுடைய துரதிருஷ்டம் அவள் ரொம்பப் பொல்லாதவளாக இருந்தாள்.

சிறிது காலத்தில் கிழவனின் தெம்பெல்லாம் போய்விட்டது. வேலை செய்யும் சக்தியும் போய்விட்டது. புதிய மனைவியும் அவனுக்கு அடங்கவில்லை. ஆனல் அவனுக்குக் கடவுள் பக்தி நிறைய உண்டு. ஆதலால் எல்லாப் பொறுப்புகளையும் இறைவன்மீது சுமத்திவிட்டு முடிந்தவரை தினசரி தன் கடமையைச் செய்து வந்தான். தினந்தோறும் தவருமல் கடவுளைத் தொழுது வந்தான்.

அந்தக் கிழவன்மீது கடவுளுக்கு மனம் இரங்கியதுபோலும். அதாவது அவன் தொழுது முடித்துவிட்டு வெளியே வருவான். அப்பொழுது அந்த வீட்டுக் கூரையின் மீது ஒன்பது உருண்டைகள் சோறு இருக்கும். அதை எடுத்து எல்லாக் குழந்தைகளுக்கும் ஒவ்வொன்று கொடுத்துவிட்டுப் பிறகு மனைவிக்கும் ஓர் உருண்டை அளித்து மீதி ஒன்றை அவன் உண்பான்.

இதை யெல்லாம் கிழவனின் புதிய மனைவியால் சகிக்க முடியவில்லை. 'இந்தக் குழந்தைகள் இருப்பதால்தானே ஏழு உருண்டைகள் போய் விடுகின்றன? இல்லாவிட்டால்...எல்லாவற்றையும் நாமே உண்டுவிடலாம் அல்லவா?' என்று எண்ணி அதற்காக ஒரு திட்டமிட்டாள். அதாவது அந்த ஏழு குழந்தைகளையும் வெளியே அழைத்துக் கொண்டு போய்ப் பக்கத்துக் காட்டில் ஓர் இடத்தில் வழி தெரியாதபடி விட்டுவிட வேண்டும் என்று தீர்மானித்தாள்.

அதன்படியே ஒரு நாள் அந்த ஏழு சகோதரிகளையும் வெளியே உலாவ அழைத்துச் செல்வதாகக் கிழவனிடம் கூறிவிட்டு அழைத்துச் சென்ருள். அந்தக் கொடுமைக்காரி இனிமையாகப் பேசியபடி நெடுந்தூரம் கூட்டிக்கொண்டு போனுள். அங்கே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்தச் சகோதரிகளை ஆற்றுக்கு அருகே அழைத்துச் சென்றதும், ''இந்த ஆற்றுக்கு அடியில் அழகான பெரிய மாளிகையொன்று இருக்கிறது. ஆனல் அதை ஒரு பூதம் காவல் காத்து வருகிறது. நான் இதில் குதித்து அந்தப் பூதத்தைக் கொன்றுவிட்டு வருகிறேன். பிறகு எல்லோரும் அந்த மாளிகைக்குச் செல்லலாம்!'' என்ருள் அவள்.

தம் சிற்றன்னையின் பேச்சில் மயங்கிய அந்த ஏழு சகோதரிகளும் அப்படியே நம்பினர்.

அவள் ஆற்றில் குதிக்குமுன்பு ஒரு தந்திரம் செய்தாள். ''நான் இதில் குதித்து அந்தப் பூதத்தைக் கொன்றுவிட்டுச் சிறிது நேரத்தில் வந்துவிடுவேன். ஆனல் ஒரு சமயம் என்னையே அந்தப் பூதம் கொன்ருலும் கொன்றுவிடும். அப்படிக் கொன்றுவிட்டால் நீரின் மேல் ரத்தம் தெரியும். அதைக் கண்டால் நீங்கள் வீட்டுக்குப் போய் விடலாம்!'' என்ருள்.

அவளுடைய சூழ்ச்சியை உணராத சகோதரிகள், ''சரி!'' என்றனர்.

அந்தச் சதிகாரி, முன்னேற்பாடாகச் செங்கல் ஒன்றைப் பொடி செய்து வைத்திருந்தாள். அவள் ஆற்றில் குதித்ததும் செங்கற் பொடி நீரில் மிதந்தது. அதைக்

கண்டதும் தம் சிற்றன்னையைப் பூதம் கொன்று விட்டது என்று கருதிய அந்தச் சிறுமிகள் அழுது கொண்டே கால் போன திக்கில் சென்று கொண்டிருந்தனர்.

* * *

ஆற்றில் குதித்த கிழவனின் மனைவி, சிறிது தூரம் வரை நீரினுள் மூழ்கிச் சென்று, கரையேறிக் குடிசைக்கு வந்து விட்டாள். ''குழந்தைகள் எங்கே?'' என்று கிழவன் கேட்டதற்கு, அவள் தந்திரமாக ஏதேதோ சொல்லி அந்த ஏழு சகோதரிகளும் காணமல் போய்விட்டதாகத் தெரிவித்தாள். ஆனல் அவளுடைய சூழ்ச்சி பலிக்கவில்லை. சாப்பாட்டு வேளைக்கு இரண்டு உருண்டை சோறுதான் கிடைத்தது. இதைக் கண்டு அவளுக்கே தன் தவறு தெரிந்தது. கிழவனுக்கும் தாங்க முடியாத துயரம்!

* * *

வழி தெரியாமல் நடந்துபோன அந்த ஏழு சகோதரிகளும் மிகவும் களைத்துபோய் ஓர் இடத்தில் அமர்ந்தனர். அப்பொழுது மாலை நேரம். 'இன்னும் சிறிது நேரம் சென்றதும் இருட்டி விடுமே! என்ன செய்வது' என்று சிறுமிகள் சிந்தை கலங்கினர்.

அவர்களுள் ஒருத்தி கவலையுடன் தரையை விரலால் கீறிக்கொண்டிருந்தாள். அங்கே தங்கக்காசு ஒன்று மின்னிற்று. அதைக் கண்டதும் எல்லோருக்கும் ஆச்சரியமாய் இருந்தது. இன்னும் தரையைக் கிளறிப் பார்த்தால் வேறு

ஏதாகிலும் கிடைக்கும் என்று எண்ணியபடியே ஏழு பேரும் ஆவலாய்த் தரையைக் கீறிக் கிளறிக் கொண்டிருந்தனர். அவர்களின் நினைப்பு வீண் போகவில்லை. கத்தி ஒன்று கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி கொண்டு அந்தக்கத்தியால் மேலும் தரையைப் பரவலாகப் பறித்தனர்.

என்ன ஆச்சரியம்! அங்கே ஒரு படி தெரிந்தது. மேன்மேலும் மண்ணை அப்புறப்படுத்தினர்கள்! 'வெளியே காட்டில் இருந்தால் பயங்கர மிருகங்களுக்கு இரையாக நேரும். அதைவிடச் சுரங்கத்தினுள் சென்ருகிலும் தப்பித்துக் கொள்ளலாம்!' என்று தீர்மானித்து அதனுள் இறங்கினர்.

அது ஒரு மந்திரக்காரியின் சுரங்க மாளிகை! மிகவும் அழகாய் இருந்தது. அங்கங்கே விளக்குகள் எரிந்துகொண் டிருந்தன. அவர்கள் ஏழு பேரும் உள்ளே நுழைந்த சமயம் அங்கே அந்த மந்திரக்காரி இல்லை. ஆகையால் அவர்களை 'யார், என்ன?' என்று கேட்க எவரும் இல்லாததால் அவர்கள் அந்த மாளிகை முழுவதையும் சுற்றிப் பார்த்தவண்ணமிருந்தனர். கண்ட கண்ட இடத்தில் அதிசயப் பொருள்களும், பல வகையான ரசாயனக் கலவைகளும் அந்த மாளிகைக்குள் இருந்தன. அவற்றையெல்லாம் கண்டதும் சகோதரிகளுக்கு அச்சமாய் இருந்தது. 'ஏதாவது ஒரு பூதத்தின் மாளிகையோ என்னவோ! இதில் நாம் வந்து புகுந்துவிட்டோமே! சிறிது நேரத்தில் அது வந்தால் என்ன செய்வது?' என்று கலங்கிய படியே உட்கார்ந்திருந்தனர். பசி அவர்களுடைய குடலை முறுக்கிப் பிழியவே, தின்பதற்கு ஏதாவது கிடைக்குமா வென்று மீண்டும் சுற்றுமுற்றும் துருவிப் பார்க்கையில் அங்கே ஒரு தட்டில் நிறைய ஆப்பிள், மாதுளை, திராட்சை, ஆரஞ்சு முதலிய பழவகைகள் காணப்பட்டன.

அவற்றை எடுத்து ஏழு சகோதரிகளும் வயிருர உண்டனர். பசி தீர்ந்ததும் கவலையை மறந்து தங்கள் கல்யாண விஷயமாய் விளையாட்டாகப் பேசிக்கொண்டிருந்தனர். ஒருத்தி, ''நான் அரசகுமாரனைத்தான் மணப்பேன்!'' என்ருள். மற்ருெருத்தி, ''ஒரு நாட்டின்மீது வேருெரு நாட்டினர் படையெடுத்து வருகையில் எதிர்த்து நின்று போராடுபவர் சேனுதிபதிதானே! ஆகையால் நான் ஒரு சேனுதிபதியைத்தான் மணப்பேன்!'' என்ருள். இப்படியாக ஒவ்வொருவரும் தத்தம் விருப்பம்போல் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அங்கிருந்த அறையொன்றின் உட்புறத்திலிருந்து கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. சகோதரிகள் பயந்துபோய் ஒன்றும் பேசாமல் இருந்தனர். மறுபடியும் மறுபடியும் தட்டும் சத்தம் கேட்கவே, அந்த அறையின் பலகணி வழியே எட்டிப் பார்த்தனர். உள்ளே வாலிபன் ஒருவன் இருந்தான்.

அவனுடைய கள்ளங் கபடமற்ற முகமும் பேச்சும் அவர்களுக்கு நம்பிக்கை யூட்டின. எனினும் அறை ஒரு பெரிய பூட்டால் பூட்டப்பட்டிருந்ததால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பிறகு அறைக்குள் இருந்த வாலிபன், மந்திரக்காரி அந்த அறையின் சாவியை வைத்துப் போயிருக்கும் இடத்தைச் சொன்னதும், அதன்படியே சாவியைத் தேடி எடுத்து அறையைத் திறந்துவிட்டார்கள். வாலிபனும் விடுதலையாஞன்.

அவன் அந்த ஏழு சகோதரிகளையும் விசாரித்த பிறகு, ''உடனே நாம் இங்கிருந்து தப்பிச் செல்ல வேண்டும். கொஞ்சம்கூடத் தாமதம் செய்யக்கூடாது. மந்திரக்காரி வரும் நேரமாகிவிட்டது!'' என்ருன்.

இதை அவன் சொல்லி முடித்ததுமே சுரங்க வாசலில் ஏதோ ஒரு சத்தம் கேட்டது. மந்திரக்காரிதான் வந்துகொண்டிருந்தான்.

உடனே அந்த வாலிபனுக்கு யோசனை ஒன்று தோன்றிற்று. அங்கே ஒரு மூலையில் இரத்தினக் கம்பளங்கள் ஏராளமாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றிற்குப்பின்னுல் சகோதரிகளைப் போய் ஒளிந்துகொள்ளச் சொன்னுன். அவ்வாறே அவர்கள்போய் ஒளிந்துகொண்டனர். அவன், ஒரு கோப்பையிலிருந்த திராட்சை ரசத்தை மந்திரக்காரி குடிப்பதற்கு வைத்திருந்த தண்ணீரில் கலந்துவிட்டு, அந்தச் சகோதரிகள் இருந்த இடத்துக்கே சென்று ஒளிந்துகொண்டான்.

சில விநாடிகளில் அங்கே வந்தாள், மந்திரக்காரி. அவள் மிகவும் களைத்திருந்ததால் அவர்கள் எதிர்பார்த்தபடியே, வாலிபனுல் திராட்சை ரசம் கலக்கப்பட்ட தண்ணீரை வேண்டியமட்டும் பருகிஞள். அப்படிப் பருகிய சிறிது நேரத்தில் இருந்த இடத்திலேயே மயங்கி விழுந்துவிட்டாள்.

அந்தத் திராட்சை ரசம் மிகுந்த மயக்க மூட்டக்கூடியது. அதை அருந்தியவர்கள் இரண்டு நாள் முழுதும் சுய உணர்வேயில்லாமல் விழுந்து கிடப்பார்கள் என்பது அந்த இளைஞனுக்குத் தெரியும். இந்த விவரத்தை ஏழு சகோதரிகளுக்கும் தெரிவித்ததும், ''பொழுது விடிந்ததும் இந்தச் சுரங்க மாளிகையைவிட்டு வெளியேறி விடுவதே நலம்!'' என்ருன், சகோதரிகளும் ஒப்புக்கொண்டனர்.

பொழுது விடிந்தது.

அந்த இளைஞன் அந்த ஏழு சகோதரிகளையும் மாளிகையினின்று அழைத்துக்கொண்டு வெளியேறிஞன். அந்த இளைஞன் அவ்வூரின் அரசகுமாரன் என்பதையறிந்ததும் சகோதரிகளின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!

சில நாட்களில், அவர்கள் சுரங்க மாளிகையில் பேசிக்கொண்டபடியே அவரவர் விருப்பப்படி விமரிசையாய் அவர்களுடைய திருமணம் நடந்தது. ..

ஏன் சபதம் என் மைந்தன் கடற்புலியின் மூலமாக நிறைவேறியது! நீ எப்படி இங்கே வந்தாய்?
அந்தக் காவலாளிதான் காரணம்! என்னைச் சிறை செய்து கொண்டு வந்து விட்டான்!
பிரிந்தவர்கள் ஒன்று கூடி, பெரு மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்த போது, ராஜகுமாரியின் தந்தையான பல்லவ சக்கரவர்த்தி ராஜகுமாரியைத் தேடி ஒரு கலத்தில் வருகிறார்.
சிங்கக் கொடி பறக்கும் கலம் ஒன்று வருகிறது!
ராஜகுமாரி, தூரத்தில் நின்று பார்க்க கடற்புலி படை வீரர்களைப் பார்த்து...
அதைத் தடுத்து நிறுத்துங்கள். அவசியமானால் எதிர்த்துத் தாக்குங்கள்!

வேண்டாம்! அதைத் தாக்கச் சொல்லாதீர்கள்!
தெரியும்! ஆணுடையில் இருக்கும் நீ தான் பல்லவ ராஜ குமாரி என்று அன்றே நான் அறிவேன்.
நீங்கள் மகா வீரர் மட்டுமல்ல, மகா குறும்புக்காரர்!
ஸ்! அதோ உன் தந்தை வருகிறார்.
அப்பா! என்னைக் காப்பாற்றிய இவர் கடற் கொள்ளைக்காரனல்ல! இவர்தான் உண்மையான சோழ இளவரசர்!
அப்படியா! என் அன்னையும் உன் தந்தையின் அன்னையும் கூடப்பிறந்தவர்கள்!
மணிபல்லவம், சோழநாடு இரண்டுக்கும் உரியவனான கடற்புலி, ஒரு நல்ல சுப நாளில் பல்லவ இளவரசியை மணந்து மாலையிட, அதே வேளையில் காட்டு மிராண்டித் தலைவன் மகளுக்கும் ஒரு மந்திரி குமாரன் மாலையிடுகிறான். வெகு காலம் அவர்கள் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்கள்.
சுபம்

13. திடுக்கிடும் செய்தி!

பட்டாபியும் ஹெட்கான்ஸ்டபிள் சாமிக்கண்ணும் திருவல்லிக்கேணிக்கு வந்துகொண்டிருந்தார்கள், அல்லவா? அப்பொழுது எதிரில் தற்செயலாக அந்தக் 'கறுப்புக் கண்ணாடி'க் காரனைப் பார்த்தார்கள். மிகுந்த ஆச்சரியமடைந்தார்கள். வெகு தூரத்தில் அவனைப் பார்த்ததுமே பட்டாபிக்கு அடையாளம் தெரிந்துவிட்டது. அவன் கையில் ஒரு சாவிச் கொத்தைச் சுழற்றிக் கொண்டு வந்தான்.

''சாமிக்கண்ணு! வருகிற ஆளைக் கவனி! நான் சொன்னது இந்த ஆள்தான்..'' என்றார் பட்டாபி ரகசியமாக.

''தெரியும், ஸார்!..நான் கவனித்ததுதான்.''

''டிரஸ்ஸைப் பார், பெரிய 'ஜென்டில்மன்' மாதிரி..! ஸ்லாக்கு'ம் 'பாண்ட்'டும் பிரமாதமா இருக்கு..''

''அது தெரியுது, ஸார்! அந்தக் கறுப்புக் கண்ணாடியை எதுக்குப் போட்டிருக்கான் ஸார், அவன்?''

''எதுக்கு என்ன? முகமூடி வேலை..''

''அந்தக் கறுப்புக் கண்ணாடியே சந்தேகமாய் இருக்கு சார்.''

''அட! அதிலே என்னப்பா சந்தேகம்? அது திருடங்க பழங்காலத்திலே போட்டுக் கொள்ளும் முகமூடி மாதிரி உபயோகப்படுகிறது இப்ப. அதுவும் வெளியே பளபளப்பா இருக்கிறதனாலே உள்ளே கண் தெரியாது.''

''ஆமாம்! ஆமாம்!''

அவர்களைத் தாண்டிக் கொண்டு சென்றான் எதிராஜ்.

''ஏன், ஸார், பகல்லே ஏன் இவன் இப்படி ஊர் சுத்தறான்?''

''ஆமா! ஊர் நிலவரம் தெரிய வேண்டாமா? அடேயப்பா, அவனுக்கு இரண்டு கையாட்கள்! பலே பேர்வழிகள். ஒண்ணு கூர்க்கா, இன்னொன்று ஒரு சிறு பையன்!'' பட்டாபி மெதுவாகத்தான் சொன்னார், சைக்கிள்கள் வேகமாகப் பறந்தன.

பட்டாபிதான் அவசரப்படுத்தினார். ''கறுப்புக் கண்ணாடி இல்லாதபோது அவன் வீட்டுக்குப் போக வேண்டும். சீக்கிரம். அவன் திரும்பி வருவதற்குள் வேலையை முடிக்க வேண்டும்.'' இருவரும் வேகமாகத்தான் வந்தார்கள். பட்டாபி ரொம்ப அவசரப்பட்டார். அவர்கள் சுப்புவின் வீட்டு வாசலில் வந்து இறங்கினார்கள். சாமிக்கண்ணு வீட்டிற்குள் வந்து, ''பஞ்சு ஸார்.. பஞ்சு ஸார்..'' என்று கூப்பிட்டார். பட்டாபியும் கூடவே உள்ளே வந்து நின்றார். அவருக்கு ஓர் ஆச்சரியமும் காத்திருந்தது. உள்ளேயிருந்து ஸ்ரீதரனும், ஸம்பத்தும் வந்துகொண்டிருந்தார்கள். சுப்புவின் அப்பா-பஞ்சு ஸார் இருவரையும் வரவேற்றார். சாமிக்கண்ணு, ''இவரைத்தான் நான் நியமித்திருக்கிறேன்!'' என்று

பரிசுபெற்ற தொடர்கதை:

மெதுவாகப் பட்டாபியிடம் சொன்னார்.

பஞ்சு ஸார் எல்லோரையும் தனியாக ஓர் அறைக்குக் கூட்டி வந்து உபசரித்தார். பட்டாபி அவசரப்படுத்தி, "சாமிக்கண்ணு, அடுத்த வீட்டிலே இருக்கிற அந்தப் பைத்தியக்காரப் பெண்ணை முதலில் கூட்டி வந்து விடவேண்டும். அது முக்கியம்.." என்றார்.

"அது அவசரமில்லை ஸார்.." என்று சாமிக்கண்ணு சொல்வதற்குள் ஸம்பத் இடைமறித்து, "அப்பா! நான் முடிந்தவரை முயற்சி செய்துவிட்டேன். அவள் வர மறுத்துவிட்டாள். இப்பொழுது தான் அவளைப் பார்த்தேன். எனக்காக ஜன்னலைத் திறந்து வைத்திருந்தாள். என்னால் முடிந்தவரை அவளை அழைத்துவரப் பார்த்தேன். 'வரமாட்டேன்' என்று சொல்லி விட்டாள். மேற்கொண்டு எனக்கு எச்சரிக்கை செய்கிறாள் அவள். அந்தக் கறுப்புக் கண்ணாடி என்னைப் பிடிக்கப் போகிறானாம். எப்படி?" என்றான்.

"ஸம்பத்! எப்பொழுதும் நீ ஜாக்கிரதையாக இரு.. இப்பொழுதே அந்த ஆளை அரெஸ்ட் செய்ய முடியும். ஆனால் 'அரெஸ்ட்' செய்தால் அவன் வீட்டில் களவு போன பொருள்கள் ஏதேனும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் குற்றவாளி என்று ருசுப்பிக்க முடியும்.." என்றார் பட்டாபி.

"இன்றிரவு எங்கே போகிறார்கள் என்று கவனித்து, இன்று மாட்டிவிடலாமே. திடீரென்று அந்த ஆளை அமுக்கினால்தான் கையும் களவுமாகப் பிடிக்க முடியும்.." என்றார் சாமிக்கண்ணு.

பட்டாபிக்கும் அந்த யோசனை சரியென்று பட்டது.

அன்று இரவு எப்படியாயினும் அந்தக் கூர்க்காவையும் அவனையும் 'அரெஸ்ட்' செய்துவிடுவது என்று தீர்மானம் செய்து, திட்டம் வகுத்தார்கள்.

கடைசியாக பட்டாபி ஒரு யோசனையை வெளியிட்டார்.

''அந்த வீட்டுச் சொந்தக்காரரைக் கூப்பிட்டு எழுதி ஏன் அதன் மூலம் அவர்கள் குட்டை வெளிப்படுத்தக்கூடாது?''

''அந்த வீட்டுக்காரர் கவலையில்லாமல் மலேயாவில் இருக்கிறார். அவர் எப்படி வருவார் இங்கே?'' என்றார் பஞ்சு ஸார்.

''யார் கண்டார்கள், அப்பா? அவரும் இதற்கு உள்கைதானோ என்னவோ!'' என்றான் ஸம்பத்.

''இருக்கலாம், இருக்கலாம்.. அது சரி;இவர்கள் சேகரித்த நகைகள் கடைக்கு வந்துதானே ஆக வேண்டும்.

''எங்கே வருகிறது? அப்படி வந்தால் மாட்டிக்கொள்வானே..'' என்றார் சாமிக்கண்ணு.

''அது சரி, அது அப்புறம் ஆகட்டும். வாங்க போகலாம்..'' என்றார் பட்டாபி.

பிறகு பட்டாபியின் வேண்டுகோளுக்கிணங்கி அந்தப் பஞ்சு ஸார் மாடியில் அந்த ஜன்னலை இருவருக்கும் காட்டினார். அப்போது ஜன்னலின் நடுவே விழுந்திருந்த ஒரு துவாரத்தை அவர்கள் இருவருமே கவனிக்கத் தவறவில்லை. ஸம்பத்தும் கவனித்துத் தனக்குள் ஓர் ஊகம் செய்து கொண்டான். எல்லோரும் கீழே இறங்கி வந்தார்கள். அவர்கள் எல்லோரும் வாசலை நோக்கி விரைந்தபோது, தற்செயலாக ஸம்பத் திரும்பினான். அவர்கள் சற்று முன் பேசிக்கொண் டிருந்த அறையினுடைய ஒரு ஜன்னலுக்கு வெளியே அவன் பார்வை சென்றது. அங்கே..யாரோ ஓர் ஆள்! 'வெடுக்'கென்று தலையை இழுத்



துக்கொண்டு மறைவது அவனுக்குத் தெரிந்துவிட்டது. யாரோ, அவர்கள் அத்தனை நேரம் பேசிக்கொண்டிருந்ததையெல்லாம் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்திருக்க வேண்டும்! மைம்பத் பேசாமல் ஒன்றும் தெரியாதது போல் நடந்தான். ஒரு வேளை அந்த ஆள் சுப்புவாக இருக்குமோ? இல்லை, சுப்பு இல்லை. அவன்தான் கூடத்தில் உடம்பு சரியில்லாமல் கிடக்கிறானே!..பின் வேறு யார்?..

* * *

காலை பத்தரை மணிக்கு வெளியே சென்ற எதிராஜ் பகல் மூன்று மணிக்குத்தான் வந்தான். அப்பொழுது துரை கீழ் ஹாலில் படுத்து நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தான். எதிராஜ், வந்ததும், அவனைத்தான் எழுப்பினான்.

''என்ன தூக்கம் துரை? தூக்கம் வருகிறதா உனக்கு?'' என்றான் எதிராஜ்.

''என்ன! எதிராஜ், 'பயம்' இப்பொழுதுதான் வந்திருக்கிறதா? ஆபத்து வரும் என்று இப்பொழுதுதான் தெரிகிறதா?'' கேலியாகக் கேட்டான் துரை.

''அதையெல்லாம் நான் சொல்லவில்லை..இரும்புப் பெட்டி, 'டயரி' வீட்டிற்கு வருகிறவரை எனக்குத் தூக்கம் கிடையாது.''

''அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.''

''ஏன் கவலை இல்லை? மாட்டிக்கொண்டால் இருவருக்கும்தான் கத்தி கழுத்திற்கு வரும்.''

''ஆனால் அதற்கு முன்னால் எனக்குத் தப்பித்துக்கொள்ளத் தெரியும்.''

அப்புறம் இருவரும் பேசவே இல்லை.

அடிக்கடி அவர்கள் இருவரும் இந்த மாதிரிச் சண்டை போட்டுக்கொள்வார்கள். ஒருவர் மற்றவரைக் குற்றம் சாட்டுவதுதான்

கண்ணன்

ஆகஸ்ட் 15-ஆம் தேதி சுதந்தர இதழில்

முழு நீளக் கதை

ஒன்றும்

அண்ணன் கடிதம்
காலம் சொல்லும் கதை

என்ற

இரு புதிய பகுதிகளும் வெளிவருகின்றன

உங்கள் இதழுக்கு முந்துங்கள்!

அவர்கள் வழக்கம். ஆனால் அவர்கள் வெகு சீக்கிரம் சமாதானமாகி விடுவார்கள். தங்கள் விரோதத்தை மறந்து தங்கள் காரியங்களில் ஈடுபடுவார்கள். அன்று துரை சிறிது கோபமாகத்தான் இருந்தான். ஆனால் எதிராஜ் அவனைவிடக் கோபமாக இருந்தான்.

"துரை! உனக்குச் சாமர்த்தியமே போதாது. விநாயகத்தின் வீடு அதேதான். நீதான் ஏமாந்து போய்விட்டாய்.. அதுவும் கேவலம் ஒரு பெண்பிள்ளையிடம்.. அவர் பேச்சை நம்பினாயே!" என்றான் எதிராஜ்.

"ஆமாம்! அதைப் போய்ச் சொல்லிவிட்டாய். இப்பொழுது அதைவிட முக்கிய விஷயம்.. முதலில் இந்த வீட்டைக் காலி செய்தாக வேண்டும் போலிருக்கிறது."

"ஏன் இப்பொழுது என்ன ஆகி விட்டது?"

"இன்ஸ்பெக்டரிலிருந்து, ஹெட் கான்ஸ்டபிள், போலீஸ்காரன், அந்த இரண்டு பயல்கள் வரை விஷயம் தெரிந்துவிட்டது. இன்று இரவு பிளான் போட்டுவிட்டார்கள். எட்டு மணிக்குப் போலீஸ் கூட்டம் வருகிறது. அப்புறம் கோவிந்தாதான்! தயாராக இரு."

"என்ன சொல்கிறாய் துரை?"

"சொல்கிறதென்ன? கிளம்பு, சொல்கிறேன். முக்கியமான பொருள்களை எடுத்துக்கொண்டு ஜாகை மாறியாக வேண்டும்."

"என்ன செய்கிறது, ஆபத்து வந்து விட்டதே!"

எதிராஜும் யோசித்துக் கொண்டே இருந்தான். அவன் மனத்தில் பலவித யோசனைகள் உருவாயின. ஐந்து மணிக்குத் துரை சட்டையை மாட்டிக்கொண்டு கிளம்பினான். எதிராஜ் இன்னும் யோசனை செய்து முடிக்கவில்லை.

"துரை! எங்கே கிளம்புகிறாய்? யோசனை ஒன்றும் சொல்லவில்லையே நீ.."

"இரும்புப் பெட்டியைக் கொண்டு வருகிறேன் முதலில்.

இருபதாம் நூற்றாண்டு மேதைகள்

இன்று அமெரிக்க நாட்டின் புகழ்மிக்க ஜனாதிபதியாக இருக்கிறாரே, ஐக், அவர் ஒரு காலத்தில் கூடையில் கறிகாய்களைத் தூக்கி விற்றவர் என்பது உங்களுக்குத் தெரியுமா? சுரங்கத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து, சுரங்கம் வெட்டிய ஒருவர், பகலெல்லாம் ஆடுகள் மேய்த்துவிட்டு இரவெல்லாம் பள்ளிகளில் படித்து அறிவைத் தேடிக்கொண்ட ஒருவர், மற்றொரு மாபெரும் நாட்டின் சர்வாதிகாரம் பொருந்திய பிரதம மந்திரியாக இருக்கிறாரே அவரை யாவது குருஷ்சேவ் என்று தெரியுமா? செல்வத்திலே பிறந்து, சிறைகளிலே பல்லாண்டுகள் உழன்று, ஈடு இணையற்ற புகழும் பெருமையும் படைத்த ஒருவரை, நாம் நேரு என்று ஊகித்துவிடலாம்; ஆனால் சர்ச்சிலைவிட அரசியல் நேர்மையும் நெப்போலியனைவிட ஞாபகசக்தியும் ஸீஸரைவிட ஆற்றலும் அலெக்ஸாந்தரைவிட கம்பீரமும் பொருந்தியவர் அவர் என்பது தெரியுமா? எட்டு வயதில் ஏர் பிடித்து, பதினைந்து வயதில் மணம் செய்துகொண்டு, பள்ளியாசிரியராக வரமுயன்ற மாஸே துங் தேசீய சீனாவைச் செஞ்சீனாவாக மாற்றிய வரலாறு தெரியுமா? நாவலரும் காவலருமான சர்ச்சிலையும், இரும்பு மனிதனை எதிர்த்த உருக்கு மனிதன் டிட்டோவையும் ஒரே நாளில் மன்னரை ஒழித்து மக்களில் தலைவனாக வந்த நாஸரையும் இன்னும் சில மேதைகளையும் ஐந்து ஐந்து நிமிஷங்களில் பார்க்க வேண்டுமென்றால், வானதிப் பதிப்பகம், சென்னை-17 வெளியிட்டிருக்கும் இந்தப் புத்தகத்தை வாங்கிப் படிக்கலாம். டி. எம். காளியப்பா, எம். ஏ. இதை எழுதியிருக்கிறார். விலை ரூ. 2/-

தோழன் தேவை!

சர்க்கஸ் கம்பெனி ஒன்றில் இரண்டு வாலில்லாக் குரங்குகள் இருந்தன. அவை செய்யும் வேலைகள் எல்லாம் மிகப் பிரமாதமாக இருந்தன. திடீரென்று ஒரு நாள் ஒரு குரங்கு நோயுற்று இறந்துவிட்டது.

தன் தோழன் இறந்துவிட்ட துக்கத்தில் மற்றொரு வாலில்லாக் குரங்கு சாப்பிட மறுத்தது. உற்சாகம் இழந்து காணப்பட்டது! அந்தச் சமயத்தில் முதலாளி ஊரில் இல்லை. மானேஜர் பாடு திண்டாட்டமாகிவிட்டது!

எனவே அவர் கடைசியாக முதலாளிக்குக் கீழ்க்கண்டவாறு ஒரு கடிதம் எழுதினார்:

''வாலில்லாக் குரங்குகளில் ஒன்று இறந்துவிட்டது. மற்றொன்று தன் தோழனை இழந்துவிட்ட வருத்தத்தில், மிகவும் தொந்தரவு செய்கிறது. தோழன் அதற்கு மிகவும் தேவை. நீங்கள் உடனே வரவேண்டுகிறேன்!''

ப. கி. மூர்த்தி

எதற்கும் ரெடியாக இரு. ஆறரை மணிக்கு வந்து விடுகிறேன்.''

துரை வெளியே போனான்.

அதே சமயம் அந்தப் பங்களாவுக்கு அடுத்த வீட்டில் - அதாவது சுப்புவின் வீட்டுக் கொல்லைப் புறத்தில் இரண்டு பேர் ரகசியமாகப் பேசிக்கொண்டார்கள். ஒன்று சுப்பு; இன்னொன்று அந்த வேர்க்கடலைக்காரப் பையன்.

''எனக்கு என்ன கொடுத்தான்! நான் இல்லாவிட்டால் இவர்கள் வண்டி ஓடுமா? என்று கேட்கிறேன். உம்..'' என்றான் அந்தப் பையன்.

''சுத்த மோசம். நேத்திக்கு எவ்வளவு சாமர்த்தியமா காரியம் பண்ணியிருக்கேன்! அதுக்கு உதை உதைன்னு உதைச்சிருக்கான் பாரு..என்னை..'' என்றான் சுப்பு.

''அட போடா! இளிச்சவாயா! நீ ஏண்டா அவனுக்குச் சாதகம் பண்றே?..''

''பணம்டா...எங்கப்பா பணம் குடுப்பாரா? ஒரு சினிமா..காபி அதுக்கு இதுக்கு..''

''முட்டாளே! அவங்க நம்மளாலே லட்சம் லட்சமாச் சம்பாதிக்கிறாங்க. நமக்குக் கொடுக்கிறது ரொம்பக் குறைச்சல். எனக்குத் தோணுது ஒரு யோசனை.''

''என்ன, என்ன?''

''இவங்களுக்குச் சாதகம் பண்ற மாதிரி சொல்லி, இவங்களிடம் நாம் முடிந்தவரை பிடுங்கிக்க வேண்டியது. கடைசியிலே போலீஸிலே சொல்லிப்பிட்டா, நமக்குப் போலீஸிலே வேறே 'ப்ரைஸ்'..''

''என்னமோ! நீ சொன்ன சரி; நான் நேத்திலேருந்து அந்தப் பக்கம் தலை காட்டல்லே..நீயும் வியாபாரத்திற்குப் போகல்லியாக்கும்!''

''இன்னும் ஒரு வாரத்திற்கு நமக்கு வேலை கிடையாது. மத்தியான்னம் ஒரு முக்கிய விஷயம் அந்த ஆள்கிட்டே சொல்றேன். நாலணுக் கொடுக்கறான். இன்னிக்கி உங்க வீட்டிலே போலீஸ் ஆள்கள் பேசிண்டிருந்ததையெல்லாம் ஒப்பிச்சேன். நாலணுக் கொடுத்தான் கையிலே. இன்னிக்கி நான் இதைச் சொல்லல்லேன்னு அப்புறம் இவங்க பாடு 'ஹரேராம, ஹரேராம ராம ஹர ஹரே!' என்று பஜனை செய்துண்டுதான் போகணும்.''

''அது சரி என்ன யோசனை சொல்லப்போறே, நீ நமக்கு?''

''எல்லாம் 'பிளான்' போட்டாச்சு! இவங்க ஜாகை மாத்திப் போகட்டும்..அந்த இதை..''

''எதை? கறுப்புக் கண்ணுடியைத்தானே? எனக்கு ரொம்ப ஆசை! ஒரு கறுப்புக் கண்ணுடி வாங்கணும்னு..'' என்றான் சுப்பு.

''ஆகட்டும்! ஆகட்டும்!.. நாளைக்குச் சொல்றேன்'' என்றான் அந்தப் பையன். பிறகு இருவரும் பிரிந்தார்கள். அவர்கள் பேச்சை ஒரு செடியின் மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த பஞ்சு ஸார் வெளியே வந்தார். சுப்பு அதைக் கவனிக்கவில்லை!

(தொடரும்)

அலமுவின் படிப்பு

'லெமன்'

அ ஆ இ ஈ எழுதச் சொல்வேன்
அலமு அழகாய் எழுதிடுவாள்;
உ ஊ எ ஏ எழுதென் றாலும்
உடனே சரியாய் எழுதிடுவாள்;
ஐ ஒ ஓ ஔ எழுது என்பேன்;
அதையும் நன்றாய் எழுதிடுவாள்;
அஃகை எழுதச் சொன்னால் மட்டும்
அஹ்ஹஹ் என்று சிரித்திடுவாள்! 1

க கா கி கீ எழுதிக் காட்டிக்
காக்கை கிளிபோல் கத்திடுவாள்;
கு கூ கெ கே எழுதும் முன்னே
குயிலைக் கூவிப் பழித்திடுவாள்;
கை கொ கோ கௌ எழுதும் வேளை
கண்ணைக் கசக்கி விரல்விட்டு
'கையைவலிக்குது, இனிமேல் கொஞ்சம்
கணக்குப் போடலாம்' என்றிடுவாள்! 2

ஒன்றுஇரண்டு எண்ணச் சொல்வேன்;
ஒப்புக் கேதோ சிலஎண்ணி,
'கன்றுக்குட்டி, காட்டுப் பூனைக்
கதைசொல் லுங்கள்' என்பாள்; நான்
'இன்றுன் சிலேட்டில் இருபது மட்டும்
எழுதிய பின்தான் கதை' என்றால்,
'ஒன்று விட்டொருநாள் கணக்குப் பாடம்
ஒவ்வொரு நாளும் கதை' என்பாள்! 3

ராஜாராணிக் கதைகள் பேசி
ரெயிலும் கப்பலும் மோட்டாரும்
மேஜைமீது கொலுப்போல் வைத்து
மேலும் பலபல விவரங்கள்
யோசனை செய்து எடுத்துச் சொன்னால்
ஒன்றும் காதில் வாங்காமல்
ரோஜாப்பூமேல் நினைவாய் ஏதோ
ரோஜாப் பாட்டைப் பாடிடுவாள்! 4

அக்பரும் பீர்பாலும்

உஷா

''மறந்து விடாதீர்கள், சர்தார்ஜி! தாங்கள் யார் என்பது அவனுக்கு நினைவிருக்கட்டும்.''

அரண்மனைப் பூந்தோட்டத்திலே அடர்ந்த மரங்களிடையே அமர்ந்திருந்தான் யூசுப். அவன் எதிரே நின்ற நசீர்தான் தணிவான குரலில் அப்படிக் கூறியவன்.

யூசுப்பின் புருவங்கள் நெரிந்தன. உதடுகள் துடித்தன. அன்று தர்பாரில் தனக்கேற்பட்ட அவமானத்தை அவனால் மறக்கவே இயலவில்லை. அன்றைத் தினத்திலிருந்து பாதுஷா அக்பரை விட்டுக் கணமும் பிரியாத பீர்பாலைக் காணும் போதெல்லாம் யூசுப் மனம் குமுறினான். அவன் உள்ளம் பொறாமையால் வெந்துகொண்டிருந்தது.

''சர்தார்ஜி, தாங்கள் பாதுஷாவின் மைத்துனர் என்பதை மறந்து விடாதீர்கள். உங்களுக்கு அந்தப்புரச் செல்வாக்கும் உண்டல்லவா? எதற்கும் தங்களையே கலந்து ஆலோசிக்கும் பாதுஷா எப்படி மாறிவிட்டார் பார்த்தீர்களா? நானும் பார்க்கிறேன், அந்தக் கால்பி அந்தணன் நிழல்போல் அல்லவா இணைந்து திரிகிறான்!'' நசீர்கான் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்துக் கொண்டிருந்தான்.

'ஹூம்...' என நீண்ட பெருமூச்செறிந்தான் யூசுப்.

''சர்தார்ஜி... நீங்கள் கவனித்தீர்களா? பாதுஷாவின் அந்தரங்க நண்பர்கள், படைத்தலைவர்களைத் தவிர வேறு எவருமே நெருங்க முடியாத அந்தப்புரம்கூட பீர்பாலை வரவேற்கிறதாம். தங்கு தடையின்றிப் பீர்பால் அந்தப்புரத்தில் உலவி வருவதாக நேற்றுக் கேள்விப்பட்டேன்.''

''ஹூம்..பேகம் சாகிபாகூட பீர்பாலுக்கு முன்னால் பர்தாவை விலக்கிவிட்டாராம். பாதுஷா மட்டும் என்ன, பேகம் சாகிபா கூட பீர்பாலுடன் உரையாடி

மகிழ்கிருர்கள். கலிகாலம் சர்தார்ஜி..''

''அவன் ஏதாவது மந்திர வாதியோ?'' யூசுப் வறண்ட குரலில் வினவினுன்.

''யார் கண்டார்கள்? மகா மேதாவி! நினைத்தவுடன் கவி பாடுவதில் வல்லவன், சமத்கார மாகப் பதில் கூறுவதில் இணையற்ற வன், வீரன், கொடைவள்ளல் என என்னென்னவோ சொல்லிக் கொள்கிருர்கள்! யார் கண்டது; ஒரு வேளை மாயாஜாலம் தெரிந் தவனே என்னவோ..இல்லாவிடில் முதற் சந்திப்பிலேயே பாதுஷாவை இவ்வளவு தூரம்....''

''மண்ணுங்கட்டி, என்ன உனக் குச் சுய அறிவு போய்விட்டதா? பிதற்ற ஆரம்பித்துவிட்டாயே!'' என எரிந்து விழுந்தான் யூசுப்.

நசீர்கான் குழைந்தான். ''மன்னித்துவிடுங்கள், சர்தாஜி..''

''ஹ..ஹ்..ஹ்..ஹ்....''

அக்பரின் சிரிப்பொலி அம்மலர் வனம் முழுவதும் பரவி நின்றது.

யூசுப் திடுக்கிட்டு எழுந்து நின்ருன். நசீர்கானும் உடல் பதற எழுந்தான்.

பாதுஷா பீர்பாலுடன் ஏதோ உரையாடியவாறே, மலர் வனத்திடையே வந்துகொண் டிருந்தார். மற்றும் சில மன்சுப்தார்களும் பிரபுக்களும் தர்பார் பிரமுகர்களும் பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்தனர்.

யூசுப் மெல்லப் பின்ஞல் நழுவிச் சென்று கூட்டத்தில் கலந்துகொண்டான். நசீர் தன்னிடத்தை விட்டு அசையவில்லை.

மெல்ல மெல்ல வீசும் இளவேனிலின் தென்றலினிடையே அக்பர் உலாவினுர். திடீரென அவர் கண்கள் எதிரேயிருந்த மைதானத்தை நோக்கின.

பரந்து கிடந்த பசும் புல்வெளியிலே கழுதை ஒன்று, பசும் புல்லை மேயாது எழும்பி எழும்பித் தன்னிச்சையாகக் குதித்துக்கொண்டிருந்தது.

வியப்புடன் அதை நோக்கிய பாதுஷா பீர்பாலை நோக்கி வினவினுர்:

''கழுதை குதிப்பது ஏன்?''

''பின்ஞல் எஜமானனே முன்ஞல் கடிவாளமோ யில்லையே! ஷா இன் ஷா..''

''சபாஷ்! கவிராயரே..'' எனப் பாராட்டிய பாதுஷாவின் பார்வை பின்ஞல் நின்ற யூசுப்பின்மீது வீழ்ந்தது. அருகே நின்ற நசீர்கானையும் அவர் காணத் தவறவில்லை. யூசுப், நசீர்கானைப்பற்றி நிறையச் சொல்லியிருந்தான். நசீர் பாரசீக, அரபு மொழிகளில் சிறந்த வித்துவான்; அறிவாளி; கவிஞனும் கூட. யூசுப் கூறிய புகழ் மொழிகள் நினைவுக்கு வரவே பாதுஷா நசீர்கானை நோக்கி வினவினுர்.

''சொல்லுங்கள், புலவரே! என் உள்ளங்கையில் ஏன் ரோமம் முளைக்கவில்லை?''

பாதுஷாவின் முன்ஞல் தன் புலமையைக் காட்ட, தக்க தருணம் பார்த்துக்கொண் டிருந்த நசீரின் முகம் இந்தக் கேள்வியைக் கேட்டதும் வாடியது. இதென்ன கேள்வி? இதற்குப் பதில் தான் என்ன? நசீர்கானின் மூளையே குழம்பிவிட்டது. அவன் திகைத்து நின்ருன்.

பாதுஷா பீர்பாலை நோக்கினுர்.

''ஜஹாம்பஞஹ்! தாங்கள் இரு கரங்களாலும் செல்வத்தை வாரி வாரி வழங்கிக்கொண் டிருக்கிறீர்கள். இடைவிடாது செல்வத்தைக் கையில் ஏந்தியிருப்பதால்தான் தங்கள் உள்ளங்கையில் ரோமம் முளைக்கவில்லை!'' என்ருர் பீர்பால்.

பாதுஷா மீண்டும் வினவினுர்: ''அப்படியாஞல் உங்களுடைய கையில் ஏன் ரோமம் முளைக்கவில்லை, பீர்பால்?''

''பிரதி தினமும் தங்கள்முன் கை ஏந்தி வெகுமதி பெற்றுக் கொண்டேயிருப்பதால்தான், மகாராஜா!''

''சபாஷ்! ஆஞல் இதோ இவர்களின் கரங்களில் ஏன் முளைக்கவில்லை?''

யாவரும் பீர்பாலை நோக்கினுர்கள். சற்றும் பதருது பீர்பால் பதில் அளித்தார்:

''ஷா இன் ஷா! நான் சொல்ல நேர்ந்ததற்கு என்னை மன்னிக்க வேண்டும்! நான் தங்களிடமிருந்து பெறும் வெகுமதிகளைப் பற்றிக் கண்டும், கேட்டும் இவர்கள் பொருமையிஞல் கைகளைப் பிசைந்துக்கொண்டேயிருப்பதால் தான்!''

பாதுஷா உரத்த குரலில் நகைத்தார். சூழ்ந்து நின்றவர்களின் முகம் வாடியது. குறிப்பாக யூசுப்பின் முகம் கறுத்தது. ஆயினும் அந்தச் சிரிப்பில் அவனும் கலந்துகொண்டான். யாவரும் மேலே நடந்தனர்.

அழகிய செயற்கை நீர் ஊற்றின் அருகே சிறியதொரு பள்ளமிருந்தது. அதில் கொஞ்சம் தண்ணீர் தேங்கி நின்றது. இரு பறவைகள் அதில் இறந்து கிடந்தன.

பாதுஷா தர்பாரின் கவியான பைஜியை நோக்கினார். மறுகணம் பைஜி கவிதையிலேயே பீர்பாலை நோக்கி வினவினார்:

''வேடனையும் காணவில்லை
கூர்அம்பினையும் காணவில்லை
காரணம் யாதோ நீர் உரைப்பீர
பறவைகள் ஏனோ துறந்தன
உயிரை?

பீர்பாலின் விழிகள் ஒரு கணம் அப்பறவைகளின்மீது நிலைத்தன. பின்னர் அவர் கூறினார்:

குட்டைதனில் நீர்அளவோ
கொஞ்சம்
நெஞ்சத்திலோ பேரலை எழுப்பும்
நேசம்
தாகத்தால் நாவறளத் துடித்தி
டினும்
நீ அருந்து, நீ அருந்து. என்றே
துறந்தன தம் தம் உயிரையும்
தாமே!

அக்பரின் இதயம் பரவசம் கொண்டது.

''சபாஷ்! பீர்பால்!'' என்ற சொற்கள் அனைவரது நெஞ்சத்திலும் எதிரொலித்தது.

''பீர்பால்! இந்தப் பறவைகளின் அன்பைக் கண்டு நான் வியப்படைகிறேன். ஆனால் இத்தகைய அன்பை மனிதர்களிடையே காண முடியுமா?''

''முடியும், ஷா இன் ஷா!''

''அன்பு என்பதற்குப் பொருள் யாது, பீர்பால்?''

''ராமாயணம் ஷா இன் ஷா''

''என்னது?''

''தாய்க்கும் தனயனுக்கும், தந்தைக்கும், உடன் பிறந்தாருக்கும், அடிமைக்கும் ஆண்டாருக்கும் உற்ற நண்பனுக்கும் கொண்ட பகைவனுக்கும், கணவனுக்கும் மனைவிக்கும், தோளுக்குத் தோள் கொடுக்கும் உற்றவனுக்குமிடையே எத்தகைய அன்பு உள்ளது என்பதைக் காட்டுவதுதான் ராமாயணம்!''

''அப்படியானால் நான் அதைக் கேட்க விரும்புகிறேன். என்ன சொல்கிறீர், பைஜி?''

பயில்வான்: டாக்டர்! நீங்க கையாலேயே நூறு குத்து வேண்டுமானாலும் குத்துங்க! தாங்கிக்கறேன்! ஆனால், ஊசியாலே மட்டும் குத்தாதீங்க! அப்புறம் நான் மனுசனா இருக்க மாட்டேன்!

''தங்கள் சித்தம் ஷா இன் ஷா..'' பீர்பாலின் முகம் மலர்ந்தது. ஆனால் சூழ்ந்து நின்றவர்களின் முகம் கலவரத்தால் இருண்டது. 'ஷா இன் ஷா அக்பர்.. காபிரிகளின் கதையை - அதுவும் ராமாயணத்தைக்-கேட்பதா?' என அவர்கள் மனம் குழம்பினார்கள்.

''உடனே இதற்குரிய ஏற்பாடுகளைச் செய், பீர்பால்....!''

''உத்தரவு, சாம்ராட்!''

மாலை மங்கியது. தொழுகைக்கு நேரமாகிவிட்டதை அறிவிக்கும் குரல் காற்றிலே கலந்து வந்தது. யாவரும் அவசர அவசரமாகக் கலைந்தனர்.

அக்பரின் இரு கரங்களும் வான வெளியை நோக்கிக் குவிந்தன.

''எங்கும் நிறைந்த பரம் பொருளே....'' என அவர் உதடுகள் முணுமுணுத்தன.



கடிகாரம்

எ. ந. கணபதி

காலம் தன்னை எப்போதும்
கணக்காய் நானும் காட்டிடுவேன்
காலை மாலை எப்போதும்
கடமை தவறிட மாட்டேனே!
அரைமணிக் கொருதரம் மணிதெரிய
அழகாய் 'டிங்டாங்' மணியடிப்பேன்
இரவில் நன்றாய்த் தூங்கையிலே
எழுப்பிடக் 'கணகண' மணியடிப்பேன்.
உரிய காலம் காட்டிடவே
உற்ற கைகள் இரண்டேயாம்
பெரிய கைதான் நிமிடக்கை
பிறிதொன் றாலே மணிதெரியும்.
பையில் இருந்தால் 'பாக்கட் வாட்ச்';
பரந்த சுவரில் 'வால்கிளாக்'காம்!
[illegible]யில் இருந்தால் 'ரிஸ்ட்வாட்ச்'சாம்;
கண்ணாடி 'ஸ்டாண்'டில் 'டைம்பீ'ஸாம்!

ஆவணக காப்பக
815

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

A. 8. எம். அருணாசலம், துறையூர்; 9. பி. பி. அமலதாஸ், கொலச்செல்: 10. ஆர். அப்பு, தஞ்சாவூர்; 11. மு. அமீர்ஹம்ஸா, நிபோங்டிபால்; 12. அ. அப்துல் மஜீத், சிதம்பரம்; 13. எம். ஏ. அகமது பஜ்லுல்லா, கொச்சி-2. 14. எம். அப்துல் ரஹமான், திருவிதாங்கோடு; 15. சு. ப. அருணாசலம், கோணப்பட்டு.

B. 11. எல். வி. பாலசுப்பிரமணியன், திருச்சி-2; 12. ஆர். பாலசுப்பிரமணியன், விஷ்ணுபுரம்; 13. எம் பாஸ்கரன், புதுடில்லி; 14. என். பாலசுப்பிரமணியன், அநுப்பப்பட்டி; 15. டி. பாலசுந்தரம், பீளமேடு; 16. எம். பஜ்ருல் ஹக், எடுத்துக்கட்டி; 17. எஸ். பாலசுப்பிரமணியன், நாகசேனை; 18. டி. பாலுசாமி, நாகசேனை; 19. த. பாலசுப்பிரமணியன், திருச்சி-2; 20. க. பாலசண்முகம், ஆனைமலை.

C. 5. பி. உ. சின்னசாமி, குட்டிப்பாளையம்; 6. சு. சந்திரசேகரன், விழுப்புரம்; 7. எஸ். சந்துரு, அரியலூர்; 8. எம். சந்திரிகா, புதுடில்லி; 9. எம். சந்திரசேகரன், கும்பகோணம்;

D. 6. ந. துரைராஜசிங்கம், யாழ்ப்பாணம்; 7. தண்டபாணி, தில்லையாடி; 8. டி. ஆர். தெய்வசிகாமணி, டி. ஆர். ஸத்யமூர்த்தி, சென்னை-3.

E. 1. தே. ஏகாம்பரம், கடலூர்-என். டி; 2. கே. ஆர். ஈசுவரன், வடலூர்; 3. எழிலன், பாண்டிச்சேரி; 4. குழ. எழிலியரசன், நாடியம்.

L. 1. ஆ. லோகநாயகி, ஈரோடு; 2. வி. லீலா, சென்னை-21; 3. கே. எஸ். லோகநாதன், சென்னை-4; 4. டி. எஸ். லட்சும்ணன், திருப்பத்தூர்; 5. வீ. லட்சுமீபதி, விநாயகநல்லூர்; 6. வி. லட்சுமணன், பூனா-2.

M. 14. எஸ். ஆர். மாதவன், பெருங்காட்டூர்; 15. செ. மேகநாதன், சென்னை-23; 16. ஆர். எஸ். முரளி, நெய்வேலி; 17. நா. சோ. மணிவாசகன், கண்டவிராயன்பட்டி: 18. அ. முத்தானந்தம், தங்கம்மாள்புரம்; 19. எம். ஆர். மித்ரா, மதுரை; 20. பி. எஸ். மணியன், அநுப்பப்பட்டி; 21. வி. கே. முனுசாமி, பெங்களூர்-3; 22. எச். ஓ. முகமது அன்வருதீன், கோலாலம்பூர்; 23. எஸ். மூக்கன், நாகசேனை.

N. 11. ந. நாச்சிமுத்து, கொசவப்பட்டி; 12. எஸ். நடராஜன், விஷ்ணுபுரம்; 13. வி, எஸ். நாராயணன், பம்பாய்-19; 14. எம். எஸ். நஜிமுல் ஹுசைன், கொழும்பு-13; 15. வி. நடராஜன், அத்திப்பாளையம்; 16 மு. நாகரத்தினம், ஈரோடு; 17. வி. ஸி. நம்மாழ்வார், சென்னை-13; 18. டி. நாராயணன், திருப்பத்தூர்; 19. மா. கி. நாகராஜன், பழனி; 20. ஸி. வி. நடராஜன், மேட்டுப்பாளையம்; 21. கு. நடராஜன், கண்டி.

P. 1. எஸ். பழனிச்சாமி, குமாரலிங்கபுரம்; 2. சு. பரமேசுவரன், புத்தூர்; 3. பி. ஏ. பழனிச்சாமி, குட்டிப்பாளையம்; 4. தி. பெருமாள், நிபோங்டிபால், மலாயா; 5. பி. ஜி. பழனியப்பன், மதுரை; 6. கே. பத்மநாபன், சென்னை-1; 7. ஜே. பழனி, காட்பாடி; 8. ச. பழனிச்சாமி, கீழ்ப் பெரும்பாக்கம்; 9. வி. வி. பழனிச்சாமி, பிச்சனூர்; 10. ஸி. என். பிரபாகரன், ஈரோடு; 11. எஸ். பழனியப்பன், மேலைச்சிவபுரி; 12. ஆ. பன்னீர்ச்செல்வம், ஒரத்தநாடு.

(Regd as a Newspaper in Ceylon) Regd. No. M. 5542

கண்ணன்
வெளியீடுகள்

			ரூ.ந.பைசா
1.	தங்க மாம்பழம்	ராஜி	2·00
2.	லீடர் மணி	ஆர்வி	1·50
3.	சைனு சுஜ்ஜு	ஆர்வி	1.50
4.	ஜிம்மி	பெ. தூரன்	1·50
5.	சந்திரகிரிக் கோட்டை	ஜனு	1·25
6.	அசட்டுப் பிச்சு	ஆர்வி	1·00
7.	மஞ்சள் பங்களா	ஜி. ஜயராமன்	1·00
8.	சின்ன ராஜா	வாசகன்	0·75
9.	பவழவல்லி	கி. ரா.	0·75
10.	கவிஞர் கதை	கி. வா. ஜ.	0·62
11.	விளையும் பயிர்	கி. வா. ஜ.	0·50
12.	சமர்த்து மைனு	தி. ஜ. ர.	0·50
13.	அபாயச் சங்கு	நீலம்	0·50
14.	ஜக்கு	ஆாவி	0·50
15.	ஜம்பு	ஆர்வி	0.50
16.	ஏரிக்கரை மாளிகை	ஜனு	0·50
17.	மின்னல் அரக்கன்	ஜனு	0·50
18.	ராஜாவும் குருவியும்	சோமசன்மா	0·50
19.	கழுகும் கிளியும்	சோமசன்மா	0·50
20.	தவளையும் காளையும்	சோமசன்மா	0·50
21.	விஞ்ஞானம் பேசுகிறுர்	பெ. நா. அ.	0·50
22.	பாரஸீக ரோஜா	ஆர்வி: ஸாமி	0·32
23.	புலிக் குட்டி	ஆர்வி: ஸாமி	0·40
24.	தூங்கும் அழகி	ஆர்வி: ஸாமி	0·25
25.	குளிகைத் தீவு	ஆர்வி: சங்கர்	0·25
26.	மாஸ்டர் பாலகுமார்	ஆர்வி: ஸாமி	0·25
27.	நீச்சல் பழக்கம்	டிமான்ஸ்டிரேட்டர்	0·20
28.	பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும்	எஸ். ஜே.	0·20
29.	கோழி விதைத்த நெல்	சூடாமணி	0·20
30.	தங்கத்தின் பந்து	சூடாமணி	0·20
31.	என் பேர் என்ன?	சூடாமணி	0·20

சந்தாதார்களுக்குக் கமிஷன் உண்டு

ஐந்து வயது முதல் பதினுறு வயது வரையில் உள்ளவர்களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் இவை.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை - 4.